விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 18 புதன்கிழமை (04.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2604)

## 3 வகையான அரசியல் கைதிகளில் முதல் பிரிவினருக்கு மாத்திரம் விடுதலை

### நீதியமைச்சர் விஜேதாச யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை 3 வகையாக அடையாளப்படுத்தி அதில் முதலாவது பிரிவினரை மாத்திரம் முதலில் விடுவிக்க முடியும்.

ஏனையவர்களின் விடுதலை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது என நிதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்.

மேலும் பயங்கரவாத தடுப்பு பிரிவின் கீழ் இருந்த கைதிகளை சட்டமா அதிபர் திணைக்களத்தில் பாரப்படுத்தி சிறைகளுக்கு நேற்றைய தினம் காலை மாற்றப்பட்டுள்ளதா



24 ஆம் புக்கம் பார்க்க....

## முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழர்கள் பின்பற்ற வேண்டும்

### "வலம்புரியை மேற்கோள்காட்டி பேராசிரியர் சிற்றம்பலம் பேச்சு"

(யாழ்ப்பாணம்)

அரசியலில் நேர்மையும் உறுதியும் கொண்டு செயற்பட்டு வருகின்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழ் மக்கள் பின்பற்ற வேண்டுமென வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தை மேற்கோள்காட்டி தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

நல்ல சிந்தனை கொண்ட அனைவரும் முதலமைச்சரோடு இணங்கிச் செயற்படுவதன் மூலம்தான் எமது இலக்கினை முழுமையாக அடைய

23 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழினத்தை சீரழிக்க திரைமறைவில் சதி!

## 1 1/2 இலட்சம் இராணுவம் # போதைப்பொருள் பாவனை

### வடக்கின் முதல்வர் சாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஒன்றரை இலட்சம் இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில் போதைப்பொருள் பாவனை எவ்வாறு அதிகரிக்கின்



## இலங்கை - சீனா உறவு முக்கியம்

(கொழும்பு)

சீனாவுடன்வலுவான உறவுகளை பேணிக்கொள்வது மிகவும் முக்கியமானது என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், உலகில் உள்ள மிகவும் சக்திவாய்ந்த நாடுகள் சில,

24 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ பிரசன்னம் சபாநாயகர் விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு அருகில் நேற்று காணப்பட்ட இராணுவத்தினரின் பிரசன்னம் குறித்து சபாநாயகர் கரு ஜெயசூரிய விசாரணைகளை

வடக்கு மாகாணத்தில் ஒன்றரை இலட்சம் இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில் போதைப்பொருள் பாவனை எவ்வாறு அதிகரிக்கின்றது என்பது ஆராயப்பட வேண்டியது என தெரிவித்துள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழினத்தின் கல்வி மேம்பாட்டு நிலையை அழிக்கவும் அவர்களின் ஒழுக்கச் சீர்மையை இல்லாதொழிக்கவும் உணர்ச்சிகளை மழுங்கடிக்கவும் திரைமறைவில் நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் சாடியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



னரின் பிரசன்னம் குறித்து சபாநாயகர் கரு ஜெயசூரிய விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்கட்சியினர் விடுத்த வேண்டுகோளினை தொடர்ந்தே அவர் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத்

24ஆம் பக்கம் பார்க்க....

## விதிமுறைகளை மீறிய பணப்பரிமாற்றம்
# பசிலின் மனைவி புஷ்பாவின் நிறுவனம் குறித்து விசாரணை



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மனைவி புஷ்பா ராஜபக்ஷ தலைமை தாங்கிய நிறுவனம் ஒன்று தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

24ஆம் பக்கம் பார்க்க....

# இந்தியா - இலங்கை இணைந்து கண்காணிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் இணைந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள விரும்புவதாக இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்து

24ஆம் பக்கம் பார்க்க....

# அரசு பதவி விலக வேண்டும்
## சுதந்திர கட்சி எம்.பி விதுர கோரிக்கை

(கொழும்பு)

தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனின் அரசு பதவி விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையில ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு அரசமைக்க இடமளிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரனை பகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அரசு தனது இயலாமையை மறைப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவின் கடந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகிறது. நிறை

24ஆம் பக்கம் பார்க்க....

# மாணவர்கள் மீதான தாக்குதல்; கல்வியை சீர்குலைக்கும் முயற்சி!
## அமை.மாரப்பன பாராளுமன்றில் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற நியாயமான மற்றும் அமைதியான கல்வி திட்டத்தை சீர்குலைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் ஊடாக ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி உயர்

24ஆம் பக்கம் பார்க்க....

# அரசியல் கைதிகளின் விடயத்தை அரசியல் ரீதியாக அணுகுங்கள்
## யாழ். கிளி. சட்டத்தரணிகள் நீதியமைச்சரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை சட்ட ரீதியாக அணுகாமல் அரசியல் ரீதியாக அணுகி விடுதலை செய்யுமாறு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி சட்டத்தரணிகள் நீதிய

23ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெள்ளைவான் கடத்தல்; விசாரணையில் மேர்வின் நம்பிக்கை

(கொழும்பு)

வெள்ளை வான் கடத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என தாம் நம்புவதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அரசியல் நிகழ்வு ஒன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

வெள்ளை வான் கடத்தல்கள், கொலைகள், நிதி மோசடிகள், குற்றச் செயல்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் தமக்கு தெரிந்த அனைத்து விடயங்கள் பற்றிய தகவல்களையும் முறைப்பாடாக எழுதி குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசாரணை நடத்தி உரிய முறையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கடத்தல்கள் மற்றும் கொலைகளின் பின்னணியில் யார் செயற்பட்டார்கள் என்பது பற்றிய விபரங்களை நான் ஏற்கெனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சமர்ப்பித்துள்ளேன்.

எனவே, யார் குற்றவாளிகள் என்பது பற்றி தொடர்ந்தும் பேசுவதற்கு தாம் விரும்பவில்லை.

மேலும் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினால் தமக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டால் விசாரணைகளில் பங்கேற்று விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும், சட்டத்தை மதித்து செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## மாணவர்கள் மீதான தாக்குதல்

# பொலிஸ் ஆணைக்குழுவினால் மாணவர்களின் சாட்சியம் பதிவு

கொழும்பில் எச்.என்.டி.ஏ (HNDA) மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழு நேற்று சாட்சி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் சாட்சிகளை பதிவு செய்வதற்காக 2 மாணவர்கள் நேற்று அழைக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே கூறினார் .

இதேவேளை தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் மாணவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த 29 ஆம் திகதி கொழும்பு வோட் பிரதேசத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன் இடம் பெற்ற எச்.என். டி.ஏ மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு உயர் அழுத்த நீர்தாரைகள், கண்ணீர் புகை மற்றும் தடி அடி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்திற்கு அமைவாக வாக்கு மூலம் பெறுவதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் கொழும்பு மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி மதுரட்ட ஆகியோர் நேற்று முன்தினம் முற்பகல் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# விமல் வீரவன்ஸ ஜனாதிபதிக்கு கடிதம்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர விமல் வீரவன்ச ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு தொடர்பாக விசேட நிபுணர்களின் ஆறு அறிக்கைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துமாறு கோரி அவர் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள அறிக்கை மூலம் நாட்டின் இராணுவத்தினர் மீது கடும் மற்றும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தாருஸ்மன் அறிக்கை உண்மைக்கு புறம்பான, இவ்வாறான தகவல்களை வெளியிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல வீரவன்ச தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-12)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நகர மையத்தை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (இ)

தொடர்பு:-0776284391



வலம்புரி
021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராசேந்திரம் நேசமலர்

(பாலிநகர் வவுனிக்குளம்)

வலம்புரி குடும்பத்தைச் சேர்ந்த **திரு.இ.பாலேந்திரா** அவர்களின் அன்புத் தாயார் **திருமதி இராசேந்திரம் நேசமலர்** (பாலிநகர் வவுனிக்குளம்) அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-வலம்புரி குடும்பம்

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை நடராசா

(முன்னாள் இ.போ.ச ஊழியர்)



சந்தை மேற்கு ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராசா 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வநாயகியின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 05.11.2015 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை.** (சி-2607)

**தகவல்:-மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் குடும்பத்தினர்.**

### இராசேந்திரம் நேசமலர்



பாலிநகர் வவுனிக்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் நேசமலர் நேற்று (03.11.2015) காலமானார்.

அன்னார் இராசேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், பாலகிருஷ்ணன், பாலேந்திரம், கிருஷாந்தினி, வசந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், முசிந்தா, லிண்டா, சசிதரன், ராஜேஸ்வரி ஆகியோரின் மாமியும், அச்சுதன், அஸ்வினி, தர்சிகா, சாருனி, சாருஜன், பரிதா, லதீசன், சுடர்நிலவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.11.2015) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொள்ளவிலான்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்.**




# கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சி திட்டத்தை ஒருமாதத்துக்குள் ஒப்படையுங்கள்

## பிரதமர் அதிகாரிகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒரு மாத காலத்தினுள் தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கல்வியமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போது பிரதமர் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (இ-7-10)

## ஜனக பண்டார தென்னக்கோனை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோனை நவம்பர் 11 ஆம் திகதி வரை, விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தளை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



ஜனக பண்டார தென்னக்

கோன்1999இல்நடந்தகொலை சம்பவம் தொடர்பில் ஒக்டோபர் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உடல் நலக் குறைவினால் சிகிச்சை பெற்று வந்த வந்த ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடந்த ஒன்பது மாதங்களில் இணையத்தளம் தொடர்பில் 2 ஆயிரம் முறைப்பாடுகள்!

இவ்வாண்டின் கடந்த 9 மாதங்களில் இணையத்தளம் தொடர்பிலான 2000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர பதிலளிப்பு மன்றத்தின் பிரதான தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திரகுத்தா தெரிவித்துள்ளார்.

இவற்றில் 80 சதவீதமானவை போலியான முகநூல் பக்கங்கள் தொடர்பானது எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் புகைப்படங்களை முகநூலில் தரவேற்றும் போது, தெரிந்த நண்பர்களுடன் மாத்திரம் பகிர்ந்து கொள்ளுமாறும், இதுவே பாதுகாப்பான நடைமுறை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீப காலங்களில் இலங்கையில் அதிகளவான முறைப்பாடுகள் முகநூல் ஊடாகவே பதியப்பட்டு வருகின்றன. குறிப்பாக பெண்கள் இவ்விடயத்தில் சற்று அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(இ-7)

## மின்சாரம் தாக்கி 3 ராணுவத்தினர் உயிரிழந்தனர்!

காலி - கிங்தொடட பகுதியில் அதிவலுக் கொண்ட மின்கம்பியொன்று வீழ்ந்ததில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

கிங்தொட்ட பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாரதி பயிற்சி வாகனமொன்றின் மீது அதிவலுக்கொண்ட மின்கம்பியொன்று நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வீழ்ந்ததனால் இந்த அசம்பாவித சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீக்காயங்களுடனான மேலும் மூன்று இராணுவத்தினரும், வாகனத்தின் சாரதியும் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த இராணுவ சிப்பாய்கள் சாரதி பயிற்சிகளை பெற்றுக் கொண்டிருந்த தருணத்தில் இந்த அசம்பாவித சம்பவம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பூஸா முகாமிலுள்ள இராணுவத்தினரே இந்த அசம்பாவித சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

மின்சாரம் தாக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரவிராஜ் கொலை வழக்கின் 6 சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 பேருக்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களம், கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்த சம்பவம்தொடர்பில் 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள மூன்று சந்தேகநபர்களுக்கும் எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு மேலதிக நீதவான் நிரோஷா பெர்னாண்டோ, இரகசிய பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ராஜகிரிய பகுதியில் 2006 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் இம்மாதம் 17ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

## எம்.பிக்களுக்கு துப்பாக்கி ஏன்? கம்மன்பில கேள்வி

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக விசேட பயிற்சிகள் வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் துப்பாக்கி உபயோகிக்க வேண்டும்? என தூய ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கேள்வியெழுப்பியுள்ளார்.



இதுவரை காலமும் எனது பாதுகாப்பை நான் பார்த்துக் கொண்டேன். விடுதலைப் புலிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் போதும் நான் எனது பாதுகாப்புக்காக யாரையும் அருகில் வைத்துக்கொள்ளவில்லை.

அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க விசேட பயிற்சிகள் வழங்கப்பட தனியான பாதுகாப்பு பிரிவு பொலிஸாரிடம் காணப்படுகிறது. அவர்கள்தான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்றனர். அப்படி இருக்கும் போது ஏன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனியான துப்பாக்கியும்? அவர்களுக்கு என்று தனியான பயிற்சியும்?

யாரும்நம்பிக்கை கொள்ள மாட்டீர்கள், சிறு வயது முதல் எனது தாய், தந்தையை தவிர வேறு யாரும் எனக்கு அடித்தது கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரேமலால் ஜயசேகரவின் மறியல் மீண்டும் நீடிப்பு

முன்னாள் பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளின் போது ஐக்கிய தேசியக் கட்சிஆதரவாளர்கள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக அடையாளப்படுத்தப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் பிரேமலால்ஜயசேகர, தற்போது விளக்க மறியலில் உள்ளார்.

இந்நிலையில்நேற்று பெல்மதுளை நீதிமன்றத்தில் அவருடன் மேலும் மூன்று சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களுக்கும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவை நீடித்து நீதிபதி தினேஷ் லக்மால் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் இதற்கு முன்னர் பிணையில் விடுதலை செய்ப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அநுர எம்.பிக்கு மாரடைப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்கவுக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அவரை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## மகிந்தவின் பாதுகாப்பு சிப்பாய்க்கு பிணை

எல்பிட்டிய பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு வாகனம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய்க்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும், ஒரு சரீர பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எல்பிட்டிய பதில் நீதவான் முனிதாஸ ஹால்பன்தெனிய முன்னிலையில் சந்தேகநபர் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி மரண வீட்டுக்கு சென்ற முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்கிய வாகனம் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று உலக நாடுகள் அனைத்தும் அரசாங்கத்துடன் இணைந்துள்ளன

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

உலக நாடுகள் அனைத்தும் இன்று எங்கள் நாட்டிற்கு நிதி உதவி வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்று எங்கள் நாட்டிற்கு எதிராக செயற்பட்ட மேற்கத்தேய நாடுகள் உட்பட இன்று எங்களுடன்இணைந்துள்ளன.

இலங்கை தற்போது சர்வதேசத்தினுள் பெயர் ஒன்றினை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் ஜனவரி 8ஆம் திகதி ஏற்பட்ட புரட்சியுடன் உலகினை வெற்றி கொள்ள முடிந்துள்ளது.

எங்கள் நாட்டிற்கு தற்போது வரையில் அவசியமான வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் நிதி உதவி கிடைத்துள்ளதாகவும், அதனை பெற்றுக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வது கூட்டு அரசாங்கத்தின் நோக்கம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# கேள்வி அறிவித்தல்-2016
# கரைச்சிப் பிரதேச சபை- கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட எல்லைக்குள் அமைந்து காணப்படும் சந்தைகள் இறைச்சிக்கடைகளை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 ஆண்டு வரையான காலபபகுதிககு குததகைககு வடுவதறகான அரககு முததிரையிடபபடட கேளவிகள கழகுறிபபிடபபடும நிபநதனைகளுககு அமைய கோரபபடுகினறன.

கேளவிபபததிரம வழஙகும காலம :04.11.2015 ஆம திகதி தொடககம 18.11.2015 ஆம திகதி வரையான அலுவலக நாடகளில மு.ப-9.00 - பி.ப-3.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :19.11.2015 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறக்கும் காலம் :19.11.2015 மு.ப 10.10 மணி

கேள்வி திறக்கும் இடம் :கரைச்சிப் பிரதேச சபை, தலைமை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிடப்பட்ட தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும் . இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி கொண்டு நேரில் வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழல்படப் பிரதிகள் 02 இனை சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்


| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) மீளளிக்கப்பட மாட்டாது) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT, நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச்சந்தை -கிளிநொச்சி** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன் | 20,000.00 | 1,000.00 | 1,897,197.50 |
| 2. | தராசுக்கொட்டகை-மரக்கறி | 20,000.00 | 1,000.00 | 1,980,000.00 |
| 3. | பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, | 20,000.00 | 1,000.00 | 1,990,048.50 |
| 4. | மாட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 2,169,211.00 |
| 5. | இல.1-கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,790,616.30 |
| 6. | இல.2 கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,574,100.00 |
| 7. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 304,811.10 |
| 8. | துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 40,000.00 | 1,000.00 | 2,041,612.10 |
| | **பொதுச்சந்தை - பரந்தன்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10.000.00 | 1,000.00 | 341,475.75 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 644,655.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 220,000.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 89,545.50 |
| | **பொதுச்சந்தை - வட்டக்கச்சி** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 341,475.75 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 637,890.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை(இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 334,400.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 55,110.00 |
| 5. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,550.00 |
| | **பொதுச்சந்தை - இரணைமடு** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 341,475.75 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 952,150.21 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 777,700.00 |
| | **பொதுச்சந்தை - உருத்திரபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 97,564.50 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (D/10) | 10,000.00 | 1,000.00 | 254,100.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 10,000.00 | 1,000.00 | 276,210.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10.000.00 | 1,000.00 | 124,740.00 |
| | **பொதுச்சந்தை - ஸ்கந்தபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 341,475.75 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,550.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 338,800.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,100.00 |
| | **பொதுச்சந்தை - தர்மபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 341,475.75 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 425,007.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 107,800.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,660.00 |
| | **கல்லாறு** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 133,650.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,550.00 |
| | **ஜெயந்திநகர்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 231,550.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 137,500.00 |
| | **ஊற்றுப்புலம்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 165,110.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,550.00 |
| | **வன்னேரி** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 89,100.00 |
| | **ஆணைவிழுந்தான்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 89,100.00 |
| | **கண்டாவளை** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 119,839.50 |
| | **முரசுமோட்டை** | | | |
| | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 218,116.80 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 44,550.00 |
| | **அக்கராயன்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 89,320.00 |
| | **கல்மடு** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 89,100.00 |

## நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
4. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் என்பன குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர்சார் பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் கொண்டுசெல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.
7. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

**இ. கிருஸ்ணகுமார்,**
**செயலாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-2610)



யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்றையதினம் முற்பகல் 10மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவரை கௌரவிப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# ஐ.தே.க.முன்னாள் அமைப்பாளர் அவுஸ்திரேலியாவில் உயிரிழப்பு

மட்டக்களப்பு, பட்டிருப்பு தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியகட்சியின் முன்னாள் அமைப்பாளரும் அவுஸ்திரேலிய தமிழ் கொமினிட் டியின் தலைவரும் சமூக சேவையாளருமான ந.சிவராசா அவுஸ்தி ரேலியாவில் நேற்று உயிரிழந் துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் வசித்துவரும் இவர் கடந்த சில தினங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பயினியர் வீதியை சேர்ந்த இவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என்பதுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளராக நீண்டகாலம் கடமையாற்றியுள்ளார். மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி பாக்கியலட்சுமியின் கணவரும் ஆவார்.

யுத்த சூழ்நிலையின்போது படையினரால் கைதுசெய்யப்பட்ட பல தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கையெடுத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சுதந்திரத்தை இல்லாமல் செய்வதே அரசாங்கத்தின் நோக்கம் - திஸ்ஸ

பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை இல்லாமல் செய்வதற்காக தற்போதைய அரசாங்கம் செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

காலனித்துவ காலத்தில் செயற்பட்டதனை போன்று எங்கள் நாட்டின் அரசு நிறுவனங்கள் தனியார் வகைப்பாடு மூலம் பன்னாட்டு நிறுவனங்களான அமெரிக்கா, ஐரோப்பாவுக்கு இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை கொண்டு செல்லும் திட்டத்தை நுட்பமான முறையில் செயற்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு உள்ளூர் நிகழ்ச்சி நிரல்கள் இல்லை எனவும் அவர்கள் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கமைய நாட்டை செயற்படுத்துவதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வடக்கு மாகா ணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கையின் மின்சார சபை அறிவித்துள் ளது.

அந்த வகையில்,

04.11.2015 புதன் யாழ் பிரதேச த்தில் செட்டி வதி, சிவகாமி அம்மன் கோவிலடி (இணுவில் கிழக்கு), விளானை CTB Depot, அல் லைப்பிட்டி, மண்கும்பான், மண் டைதீவு, சோளாவத்தை, மண் கும்பான் தேசிய நீர்வழங்கல் வடி கால் சபை, மண்கும்பான் கடற் படை முகாம், மண்டைதீவு வெலுசுமண இலங்கை கடற்படை முகாம், மயிலங்காடு, குப்பிளான் காரைநகர் பாலாவோடை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதே சத்தில் கொக்கிளாய், செம்மலை, நாயாறு, அளம்பில், குமுழமுனை, தண்ணிமுறிப்பு, கொக்குத் தொடு வாய், கருநாட்டுகேணி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை.

05.11.2015 வியாழன் யாழ். பிரதேசத்தில் வட்டுவினி (இணுவில் மேற்கு), கற்பக பிள்ளையார் கோவிலடி (உடுவில் கிழக்கு), பாற்பண்ணை வீதி, கலாசாலை வீதி, பாரதி வீதி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் ஓவ சியர் கடைசந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முக்கொம்பன், நல்லூர், தம் பிராய், பூநகரி, 4 ஆம் கட்டை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம், பூவரசங்குளத்திலிருந்து கங்கன் குளம் வரை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் குஞ்சுக்குளம், மாதா கிராமம், முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண் டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச் சிக்குளம்,மணற்குளம், மேதா வெளி, பொற்கேணி, கொக்குப்படை யான், தம்பட்டமுசலி, மறிச்சுக் கட்டி,கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, அரிப்பு, சிலாவத்துறை, CECB,

முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் 06.11. 2015 வெள்ளி யாழ். பிரதேசத்தில் காரைநகர், பாலா வோடை, அச்செழு பிரதேசம் மயிலங்காடு, விளானை, குப்பிளான் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் தென்னியன்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம் LB கொலனி கிராமம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 22 - 04 - 1935



இறப்பு 02 - 11 - 2015

## திருமதி.பெர்ணடேத்தம்மா லீனஸ்

எமது கணித ஆசான் திரு.றொகான் அவர்களின் அன்பு தாயார் திருமதி பெர்ணடேத்தம்மா லீனஸ் 02-11-2015 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
2001 ,2002, 2003 உயர்தரப்பிரிவு மாணவர்கள்,
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.
(கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

(C-2606)


# ராசி பலன்

04.11.2015
(ஐப்பசி 18, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59மணிக்கு,
அட்டமி முற்பகல் 11.08 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 12.22மணிவரை
இராகுகாலம் 12.04-1.34மணிவரை
சுபநேரம் 4.34-6.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம் இரவு 12.24இற்கு சிம்-சந் | | சந் |
| | | | குரு, செவ், |
| | சனி | சூரி, புத | ராகு, சுக் |

**மீனம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** அந்நிய தேசத் தொடர்புகள் அதிகரிக்கும்,தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்:** விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்,தொழில் போட்டிகள் மாறும்,சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு, சந்தித்த நண்பர்களினால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு,புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், செய்தொழில் விருத்தியுண்டு,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம்,உங்களைப் பற்றி விமர்சிப்பவர்களை எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள், பயணங்களால் பலனுண்டு,வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப் புணர்வு அவசியம்,எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தேவையற்ற செலவுகள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், விருந்தினர் வருகையுண்டு, உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்:** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள்,ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் வருகையுண்டு,வருமானம் திருப்தி தரும்.

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை இன்று பதியவும்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து கிளையில் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள் வாகன பதிவு புத்தகம். தேசிய அடையாள அட்டை (உரிமையாளர், சாரதி, நடத்துநர்), சாரதி அனுமதிப்பத்திரம் (சாரதிக்கு மட்டும்), காப்புறுதி பத்திரம் மற்றும் வரிப்பத்திரம் போன்ற ஆவணங்களுடன் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## பரிசளிப்பு விழா

யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஸ்கண்முககுலகுமாரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஸ், சுன்னாகம் தெற்கு கிராமஅலுவலர் யமீன்மசனட், சுன்னாகம் மத்தி கிராம அலுவலர் ம.கபிலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை சிவஸ்ரீ தி.கிருஸ்ணமூர்த்திக்குருக்கள் நிகழ்த்தவுள்ளதுடன் வரவேற்புரையினை கு.கபீணா வழங்கவுள்ளார். (இ-5)

# மனிதநேய அமைப்பினால் சிங்களமொழி கற்கைநெறி

யாழ்ப்பாணம் மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு ஊடாக சிங்கள மொழி கற்கை நெறிப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாக மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இல . 90, பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள மாவட்ட காரியாலத்திலே மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியினை கற்க விரும்பும் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நேரடியாக தொடர்பு கொள்ள முடியும். அல்லது 021 492 7201 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-5)

## பண்பாட்டு விழாவும் கண்காட்சி நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பண்பாட்டு விழாவும் கண்காட்சி நிகழ்வும் நாளை மறுதினம் 6 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தும்பளை நெல்லண்டை அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)




# தொண்டர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் 3 நாட்கள் கொண்ட இலவச தொண்டர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக இப் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் என இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவரும் சிவ தீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளையில் வழங்கப்படும் சிவதீட்சை பெற்ற அன்றிலிருந்து தொடர்ந்து 21நாட்களுக்கு சைவ உணவு மட்டுமே உண்ணக்கூடிய உறுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை 077 868 6150 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு குறுந்தகவல் மூலமும் arivukkathir gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பி வைக்க முடியும். அல்லது தபால் மூலமும் தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க முடியும்.

தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் 50 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்பதுடன் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் விண்ணப்பங்கள் பெறப்படும்.

பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழ்கள் பெறுபவர்கள் சமயம், சமூகம் சார்ந்த தொண்டுச் செயற்பாடுகளில் தத்தம் மாவட்டங்களில் ஈடுபடலாம். (இ-5)

# மனித உரிமைகள் அமைப்பின் கிளைக் காரியாலயம் திறப்பு



மனித உரிமைகள் அமைப்பின் கிளைக் காரியாலயம் கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி யாழ். நகர் திருநெல்வேலி, 104 ஆம் இலக்க முகவரியில் இவ் அமைப்பின் தலைவர் எம்.என்.எம். அசீமால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

இவ் அமைப்பின் செயற்பாடுகளாக தனிமனித உரிமை மீறல்களையும் சமூகத்தில் ஏற்படும் உரிமை மீறல்களையும் தீர்த்து வைப்பதும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஆகும்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் அவர்களுக்கு ஏற்படும் உரிமை மீறல்களையும் சட்ட ரீதியான தீர்வுகளையும் கொடுக்கஉள்ளோம்.

மேலும் சமுதாய சீர்திருத்தங்களுக்காக கருத்தரங்குகளையும் ஆலோசனைகளையும் நடத்தவுள்ளோம். மேலும் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கும் எமது மனித உரிமைகள் அமைப்பு முகம் கொடுக்கும் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

இவ் அமைப்பின் முக்கிய நோக்கம் தனிமனித, ஓர் அமைப்பின், சமுதாயத்தின் உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதே ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமிழ்க் கைதிகளின் விடுதலை கேள்விக்குரியதாகவேயுள்ளது

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு சந்தேகம்

எதிர்வரும் 7 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளிக்கப்பட்டதன் பிரகாரம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிய விடயம் சாதகமான முடிவுக்கு வருமா? என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. முக்கிய அமைச்சர்களினதும் உயரதிகாரிகளினதும் நிலைப்பாடே இதற்கு காரணமாகும். அதேவேளை அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யாது விட்டால் தங்களது உண்ணாவிரதப் போராட்டம் மீண்டும் தொடரும் என சிறையில் உள்ள அரசியல் கைதிகள் கூறியுள்ளனர்.

அவர்களது இந் நிலைப்பாடு நியாயமானதாகும். இவ்வாறு அவர்களின் போராட்டம் தொடருமாயின் அவர்களுக்கு ஆதரவாக அனைத்து மக்களினதும் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது. அத்தகைய போராட்டத்தை அரசியல், இன, மத வேறுபாடின்றி சகல பிரஜைகளும் முன்னெடுக்க முன்வர வேண்டுமென மேற்படி அமைப்பின் தலைவர் க.ஆனந்தகுமாரசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நமது நாட்டில் சகல மக்களையும் சமத்துவமாக வாழ வைக்க முடியாத பேரினவாத ஆட்சிகளின் இனவாத போக்குகளினாலும் அடக்குமுறைகளினாலும் தமிழ் மக்களும் இளைஞர்களும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கும் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டிற்கும் பதிலாக அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்டது. அதற்கு உலக வல்லாதிக்க நாடுகள் பல்வேறு உதவிகள் புரிந்து நின்றன. அதனாலேயே யுத்த இழப்புக்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இவற்றுக்கு காரணமான எவரும் சிறை வைக்கப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டம் சார்பாக செயற்பட்டவர்களே நீண்டகால சிறை வாழ்வுக்கு ஆளாக்கப்பட்டனர். கடந்த முப்பது வருடகால யுத்தத்தின் போது இயக்கங்களில் இணைந்து போராடியவர்களும் அவற்றுக்குத் தலைமை தாங்கியோரும் இன்று ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்தவர்களாக இருக்கின்றனர். இவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அப்படி இருக்கும் போது சிறைகளில் விசாரணையின்றி நீண்டகாலம் இருந்து வருபவர்களை மட்டும் பயங்கரவாதிகளாகக் காட்டி அவர்களின் விடுதலையை மறுப்பது எவ்வகையிலும் மனிதாபிமானமாகாது. அவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்படுவதன் மூலம் அவர்களது உடல, உள நிலைமைகள் பாதுகாக்கப்பட்டு நீண்டகாலமாகக் குடும்பங்களில் இருந்து பிரிந்தமைக்கு தீர்வுகாண இயலும்.

எனவே ஜனாதிபதியின் வாக்குறுதிக்கமைய நல்லாட்சியின் பெயரால் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்பாக தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக் கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மைத்துறல் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மைத்துறல் சஞ்சிகை வெளியீட்டுக்குழுவின் மைத்துறல் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந.ஞானகுமாரன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவரும் ஊடகக் கற்கைகள் இணைப்பாளருமான பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது மதிப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகரும் சந்தைப்படுத்தல்துறைத் தலைவருமான இ.இரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## கருத்தரங்கு

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி சம உரிமை இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொது நூலக உணவக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் காலை 9 மணிக்கு யாழ். நகரப்பகுதியில் இப்போதாவது அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்யுமாறு கோரி துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்படவுள்ளது. (இ-5)



மாதகல் சகாயபுரம் மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தின நிகழ்வும் நடைபவனியும் அண்மையில் நடைபெற்றன. இந் நிகழ்வில் சர்வோதய மாவட்ட இணைப்பாளர் சி.யுகேந்திர மற்றும் பங்குச் தந்தை அருள்தாசன், சர்வோதய ஊழியர்கள் இளைஞர் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள், பிள்ளைகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல், நரம்பு தளர்ச்சிகள் ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை முன் பதிவு முக்கியம்.

தொடர்பு- Shan's Health Care
255, K.K.S.Road,Kokkuvil,
Jaffna.077 035 7307 (2223)


# மது போதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறித்து விசாரணை

மது போதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கேளிக்கை விடுதி ஒன்றில் வைத்து குறித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநாகரிகமாக நடந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாணத்தில் தற்போது கடமையாற்றி வரும் ஓர் பிரதிப் பொலிஸ்மா அதிபரே இவ்வாறு மதுபோதையில் குழப்பம் விளைவித்தார் என பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதல் தடவையாக கூடிய போது இந்த விடயம் குறித்து பேசப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பங்கேற்ற அரசியல் சாசன சபையின் தலைவர் கரு ஜயசூரிய, சம்பவம் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில்பொலிஸ்ஆணைக்குழு, குறித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளது.

கடந்த வாரம் இந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதிக மது போதையில் குழப்பம் விளைவித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தபிரதிபொலிஸ்மா அதிபர் சேவை நீடிப்பு ஒன்றைப்பெற்றுக் கொண்டு கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)


## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் திருமண மண்டபத்துடன் இணைந்த கலாசார மண்டபம் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். உத்தேச மதிப்பீட்டுத் தொகை 20 மில்லியன்.

0766017302
0776059577 (C-2592)

ஆலய பரிபாலன சபை
அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம்,
கிளிநொச்சி.



## வாடகைக்கு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554 A, 554 B, 554 C எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்

தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2225)



## அதிரடிச் சலுகை

### வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com



THE ART OF LIVING

வாழும் கலைக் குடும்பம்- இலங்கை
உலக கலாசார திருவிழா, புதுடில்லி இந்தியா
மார்ச் 11, 12&13-2016



## 35 ஆண்டு கால மனிதகுலச் சேவையின் கொண்டாட்டம்

சுமார் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 40 இலட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 37 கோடி மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தையும் முன்னேற்ற சக்தியையும் ஏற்படுத்தியதை கொண்டாடும் குருஜி அவர்களின் தலைமையில் மற்றும் ஆசியுடன் இந்த உலக கலாசார திருவிழாவாக உலக மக்களின் ஒட்டுமொத்த கலாசாரமும் ஒன்றுகூடி வெளிப்படுத்தும் சங்கமமாக இருக்கும். இதில் புகழ்பெற்ற தலைவர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், மாநில முதல்வர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகைபுரிய இருக்கிறார்கள். இதில் உலகம் முழுவதில் இருந்து 20,000 இசை கலைஞர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

குறிப்பு: யாழ்ப்பாணத்தில் இருந்தும் இரண்டு இசைக்கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

கூடவே புதுடில்லி மற்றும் பல புகழ்பெற்ற சுற்றுலா தலங்களுக்கும் சென்றுவர சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(RISHIKESH, HARIDWAR, FATEHPUR, SIKRI, AGRA MATHURA, FROM COLOMBO TO DELHI- SRILANKA AIRLINES MARCH 7 14.00 HRS (RETURN) 14, MARCH 22.35 HRS)

அன்புடையீர், ஜெய்குருதேவ்!!

நம்முடைய வாழும் கலை இயக்கமானது கடந்த 35 ஆண்டுகளாக பல நாடுகளிலும் மனிதகுலத்திற்குச் சேவையாற்றி, 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் 37 கோடி மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தையும் முன்னேற்ற சக்தியையும் ஏற்படுத்தியதைக் கொண்டாடும் விதமாக, மாபெரும் உலக கலாசார திருவிழா இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் நமது குருஜி அவர்களின் தலைமையில் வரும் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11, 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

"கொண்டாட்டம் என்பது மனித வாழ்வின் இயல்பு"

-ஸ்ரீஸ்ரீ

உலக கலாசார திருவிழா என்பது உலகில் உள்ள அனைத்து மக்களும் ஜாதி மத பேதமின்றி ஒரே உலக குடும்பமாக (வாசுதேவ குடும்பம்) புதுடில்லியில் கூடும் மாபெரும் விழாவாகும்.

இந்த அற்புதமான உலக கலாசார திருவிழாவில் உலகெங்கும் இருந்து சுமார் 40 இலட்சம் மக்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது குருஜியின் ஆசியுடன் இந்த உலக கலாசார திருவிழாவானது உலக மக்களின் ஒட்டுமொத்த கலாசாரமும் ஒன்றுகூடி வெளிப்படுத்தும் சங்கமமாக இருக்கும். இந்த திருவிழாவில் கலந்துகொள்ள உலகம் முழுவதிலுமிருந்து புகழ்பெற்ற தலைவர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், மாநில முதல்வர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் வருகைபுரிய இருக்கிறார்கள்.

நமது இலங்கை வாழும் கலை அமைப்பு நாம் இந்தத் திருவிழாவில் கலந்துகொள்ள ஒரு அருமையான பயணத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வது மட்டுமல்லாது கூடவே புதுடில்லி மற்றும் பல புகழ்பெற்ற சுற்றுலா தலங்களுக்கும் சென்றுவர சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ளும் வண்ணம் விமானம் மூலம் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயணத்தில் கலந்துகொள்பவர்களுக்குக் குளிர்சாதன A/C வசதியுடன் கூடிய தங்கும் அறைகள், பேருந்து வசதிகள் மற்றும் சுகாதாரமான தென்னிந்திய உணவு வகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வரலாறு காண உள்ள "இந்த உலக கலாசார திருவிழாவில்" நாமும், நம் சுற்றமும், நட்பும் கலந்துகொள்வதைப் பெருமிதமாகவும் கடமையாகவும் கருதவேண்டும். இந்தத் திருவிழா கொண்டாட்ட மழையில் நனைந்து, குருஜியின் ஆசிபெறவும், வரலாற்றுச் சான்றாக நாம் திகழவும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புக்கு: வாழும் கலை குடும்பம்
254, BROWN ROAD, JAFFNA.
077 493 6221, 077 903 7332

THE POWER OF 35 MILLION PEOPLE TOGETHER (2228)

The World Culture Festival celebrations Will demonstrate the power of peace by bringing 3.5 million people from around the world together.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:4 3/4செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:முகாமையாளர்<br>தொ.இ: B/5149 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 55<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்:BA/விரிவுரையாளர்<br>தொ.இ: G/5181 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5153 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5183 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 90 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5155 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 9 3/4சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/5185 |
| பிறப்பு: 1986RC<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:MSC, BBA/ முகாமையாளர்<br>தொ.இ: B/5156 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5188 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட

# எட்டு குளங்களில் மடவாள சிங்கம் குளம் வான் பாய்கின்றது

(மல்லாவி)

**முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 8 நீர்ப் பாசனக் குளங்களில் முதலாவது குளமான மடவாளசிங்கம் குளம் 2 அங்குல உயரத்திற்கு வான் பாய்வ தாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் தெரிய வருவதாவது,

தொடர்ச்சியாக அண்மைய நாட்களாக பெய்து வரும் பருவ மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து செல்கின்றது.

இதற்கு அமைவாக 22 அடிகொள்ளளவு கொண்ட முத்தையன் கட்டு குளத்திற்கு 10 அடியாகவும் 23 அங்குலம் கொண்ட உடையார்கட்டு குளத்திற்கு 15 அடி 11 அங்குலமாகவும் 20 அடி 3 அங்குலம் கொண்ட விசுவமடு குளத்திற்கு 16 அடியாகவும் 14 அடி 2 அங்குலம் கொண்ட மருதமடு குளத்திற்கு 13 அடி 5 அங்குலமாகவும் 2 அடி 6 அங்குலம் கொண்ட கணுக்கேணி குளத்திற்கு11 அடி 9 அங்குலமாகவும் 21 அடி கொண்ட தண்ணிமுறிப்பு குளத்திற்கு 16 அடியாகவும் 13 அடி 9 அங்குலம் கொண்ட தட்டயமலைக் குளத்திற்கு 5 அடி 6 அங்குலமாகவும் 16 அடி 6 அங்குலம் கொண்ட மடவாளசிங்கம் குளத்திற்கு 16 அடி 8 அங்குலமாகவும் நீர்வரத்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இதில் மடவாளசிங்கம் குளம் 2 அங்குல உயரத்திற்கு வான்பாய ஆரம்பித்துள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் வரையில் கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சியானது உடையார்கட்டு குளப்பிரதேசத்தில் 37 மில்லி மீற்றராகவும் தண்ணிமுறிப்பு குளப்பிரதேசத்தில் 30 மில்லி மீற்றராகவும் கணுக்கேணி குளப்பிரதேசத்தில் 18 மில்லி மீற்றராகவும் முத்தையன்கட்டுக் குளப் பிரதேசத்தில் 3 மில்லி மீற்றராகவும் மழைவீழ்ச்சி அளவிடப்பட்டுள்ளது என முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)






ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் யு. என் ஹபிராட் நிறுவனத்தின் அனுசரணையுடன் கட்டப்பட்ட கிளிநொச்சி விவேகானந்த நகர் கிழக்கு முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இலங்கைக்கான ஜப்பான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி கெனிச்சி சுகனுமாவினால் திறந்து வைக்கப்பட்டது. திருமதி கெனிச்சி சுகனுமா, யு.என் ஹபிராட் நிறுவன பிரதிநிதிகள், கரைச்சி பிரதேச செயலர், கல்வித் திணைக்கள அலுவலர், கிராம அலுவலர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதே வேளை வளாகத்தினுள் மர நடுகை நிகழ்வும் நடைபெற்றது.(படங்கள் :- சிவநகர், மல்லாவி செய்தியாளர்கள்)

## சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(மல்லாவி)

சிறுவர்களின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று கலை நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டதுடன், கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறார்களின பாதுகாப்பு, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், வறுமையின் நிமித்தம் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி, பெற்றோருடன் வாழ வைப்பதற்கான திட்டமிடலொன்று அரசாங்க அதிபரினால் பரிந்துரைக்கப்பட்டது.

அதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக அவ்வாறான சிறுவர் இல்லங்களில் உள்ளவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வழங்கக்கூடிய வாழ்வாதார உதவி தொடர்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென அரச அதிபரினால் உத்தரவிடப்பட்டது.

பாடசாலை இடை விலகிய சிறுவர்கள், மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான புள்ளி விபரங்களை அவர் கோரியபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மௌனம் காத்தனர்.

இதன்போது திணைக்களங்களில் பணிபுரியும் சிறுவர் பிரச்சினைகளை கையாளும் உத்தியோகத்தர்களின் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடு தொடர்பில் அரசாங்க அதிபர் கடிந்து கொண்டார். எதிர்வரும் காலங்களில் இவ்வாறு பொறுப்பற்ற வகையில் செயற்படுவதற்கு இடமளிக்க போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார். (2-15)

## தொழில் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு செயலமர்வு

### க.பொ.த (உ/த) மாணவர்கள், அதிபர்களுக்கு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 2015 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் தொழில் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று புதன்கிழமை மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கும் நாளை வியாழக்கிழமை மு/மல்லாவி மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிக்கும் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கும் நடைபெறும்.

பாடசாலைஅதிபர்கள்நடப்பாண்டில்க.பொ.த. (உ/த)பரீட்சை எழுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தகவலைத்தெரியப்படுத்தி செயலமர்வில் கலந்து கொள்ளவைப்பதுடன் தாங்களும் கலந்து கொள்ள வேண்டுமென அறிவித்துள்ளார். (2-15)

## சட்டவிரோத 15 முதிரை மரக்குற்றிகளுடன் பயணிக்க முயன்ற லொறி கைப்பற்றப்பட்டது

### சந்தேகத்தின் பேரில் சாரதி கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களிக்காடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் முள்ளியவளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.கே.ரத்னசிங்கத்தின் ஆலோசனையின் பேரில் ஐந்து பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தண்ணீரூற்று நெடுங்கேணி பிரதான வீதியின் களிக்காடு எனும் பிரதேசத்தில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 15 முதிரை மரக்குற்றிகளை லொறியொன்றில் ஏற்றி முதிரை மரக்குற்றிகளின் மேல் உமி மூடைகளை அடுக்கிக் கொண்டு குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேற முற்பட்ட போதே முள்ளியவளை பொலிஸாரால் வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 15 முதுரை மரக்குற்றிகள் மறைத்து கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அத்துடன், முதுரை மரக்குற்றிகள் ஏற்றப்பட்ட குறித்த லொறி முள்ளியவளை பொலிஸில தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சாரதியை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட முள்ளியவளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட

# 12 குளங்களில் வான் பாய ஆரம்பித்த கோட்டைகட்டியகுளம்

(வவுனியா)

**வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 12 குளங்களின் தற்போதைய நீர் மட்டம் தொடர்பான அளவுகளை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் பாக்கியராஜா விகர்ணன் அறிவித்துள்ளார்.**

இதற்கமைய 25 அடி கொள்ளவுடைய வவுனிக்குளத்திற்கு 17 அடி 9 அங்குலமாகவும் 10 கொள்ளளவு கொண்ட தென்னியன் குளத்திற்கு 7 அடி 3 அங்குலமாகவும் 12 அடி கொள்ளளவு கொண்ட ஐயங்கன் குளத்திற்கு 5 அடி 2 அங்குலமாகவும் 10 அடி கொள்ளளவு கொண்ட அம்பலபெருமாள் குளத்திற்கு 7 அடி 3 அங்குலமாகவும் 11 அடி 6 அங்குலம் கொள்ளளவு கொண்ட கல்விளான் குளத்திற்கு 8 அடி 9 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவு கொண்ட மருதங் குளத்திற்கு 7 அடி 2 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவு கொண்ட பழைய முறிகண்டி குளத்திற்கு 6 அடி 11 அங்குலமாகவும் 11 அடி கொள்ளளவு கொண்ட கொல்ல விளான்குளத்திற்கு 7 அடி ஒரு அங்குலமாகவும் 12 அடி கொள்ளளவு கொண்ட மல்லாவி குளத்திற்கு 9 அடியாகவும் 11 அடி 2 அங்குலம் கொள்ளளவு கொண்ட தேறாங்கண்டல் குளத்திற்கு 10 அடி 7 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவு கொண்ட பனங்காமம் குளத்திற்கு 7 அடி 4 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவு கொண்ட கோட்டை கட்டிய குளத்திற்கு 9 அடி 9 அங்குலமாக நீர் வரத்து காணப்பட்டு 3 அங்குலம் உயரத்திற்கு வான் பாய்கின்றது.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட குளங்களில் முதலாவது வான் பாய்கின்ற குளமாக கோட்டைகட்டிய குளம் காணப்படுகின்றது.

இதேவேளை கடந்த முதலாம் திகதி அளவீடு செய்யப்பட்ட வகையில் வவுனிக்குள நீர் ஏந்து பிரதேசத்தில் 130 மில்லி மீற்றர் கனஅளவு மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## திருப்புகழ் இன்னிசைக்கச்சேரி

(கிளிநொச்சி - 1)

வவுனியா சுத்தானந்த இந்து சங்கத்தின் ஏற்பாட்டில் கந்தசஷ்டியை முன்னிட்டு நடத்தும் திருப்புகழ் இன்னிசைக் கச்சேரி எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் தலைவர் நா.சேனாதிராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதத்திற்கான முதுகலைமாணி நயினை. ப.சிவமைந்தன் இன்னிசை கச்சேரி நடத்தவுள்ளார்.

எனவே சமய, சங்கீத ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-277)



வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய மூலாலய நிர்மாண அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆலய நிர்வாகத் தலைவர் மு.குகதாசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் கிருஷ்ணபவன்,யாழ்.இந்திய துணைத் தூதர் ஆ.நடராஜன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன்,வைத்திய கலாநிதி சி.சிவமோகன் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா , வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே. சிவநேசன், து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தி.திரேஸ்குமார் , முல்லை.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் கலந்துகொண்டு முந்தியடித்து பக்திப்பரசவ நிலையில் தாம் அணிந்திருந்த தங்க ஆபரணங்களை கழற்றி அத்திபாரத்தினுள் போட்டும் தங்க நாணயங்களை போட்டும் அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

(படங்கள்:-பனிக்கள்குளம், முள்ளியவளை செய்தியாளர்கள்)

## வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு சூரியமின்கல விளக்குகள் அமைப்பு



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 சூரிய மின்கலங்கள் கொண்டு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த விளக்குகள் முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியிலுள்ள 3 ஆம் கட்டை மஞ்சள் பாலத்தில் ஒரு விளக்கும், அதனை அடுத்துள்ள வளைவில் ஒரு விளக்கும், நந்திக்கடல் வெளியிலுள்ள வளைவில் ஒரு விளக்கும் முள்ளி வாய்க்கால் வீதியோரமாக ஒரு விளக்குமாக மொத்தம் நான்கு சூரிய மின்கலங்கள் கொண்ட வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி விளக்குகள் ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி கொண்டவையாகும்.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்ட பிரதான வீதிகளில் மின்சார வசதிகளற்ற இடங்களிலுள்ள விபத்துக்கள் ஏற்படக்கூடும் எனக் கருதப்படும் முக்கிய பாலங்கள், வளைவுகள் அருகே இவ்வாறான சூரிய மின்கலங்கள் பொருத்துவதன் மூலம் மக்கள் நன்மை அடைவார்கள் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (2-302)

## புத்துவெட்டு மணற்காடு வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றம்



நல்லாட்சி அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தில் வீட்டுக்கு வீடு,கிராமத்துக்கு கிராமம் எனும் பொருளில் 15 ஆயிரம் கிராமங்களை மேம்படுத்தும் 2015 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின கீழ்வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதி உதவியு டன் முல்லைத்தீவு பிரதேசத்திற்குட்பட்ட புத்து வெட்டு வானமணற குளம் வீதியின் 125 மீற்றர் பகுதி கொங்கிறீற் வீதியாக மாற்றுவதற் குரிய வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் இயங்கும்புத்துவெட்டுவான் மணற் குளம் பிரதானவீதி சேதமடைந்த நிலையில் காணப்பட்டதுடன், இதனைப் புனரமைத்து தருமாறு மக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், புதிய நல்லாட்சி அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தில், வீட்டுக்கு வீடு, கிராமத்துக்கு கிராமம் எனும் தொனிப் பொருளில் 15 ஆயிரம் கிராமங் களை மேம்படுத்தும் 2015 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதியுதவியுடன் குறித்த வீதியின் 125 மீற்றர் நீளமான பகுதி, கொங்கீறிட் வீதியாக மாற்றுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் மூலம், தற்போது 220 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் தினமும் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)



கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதுடன், இரணைமடு குளத்தின் நீர்மட்டம்தற்போது 17 அடியாக உயர்வடைந்துள்ளது. இதேவேளை இரத்தினபுரம் பிரதான வீதி வெள்ளத்தில் காணப்பட்டமையால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அத்துடன் உள்ளூர் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றன. மக்களின் வயல் காணிகளை ஊடறுத்த வெள்ள நீர் வடிந்து செல்வதனால், வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (2-15)

### 9 மில்லியன் ரூபா செலவில்

## விசுவமடு பொதுச்சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் நிர்மாணிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு விசுவமடு பொதுச் சந்தைக்கான நிரந்தரக் கட்டடம், சுமார் 9 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிர தேசசபையின் கீழ் இயங்கும் விசுவமடு பொதுச் சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படாததால், கடந்த ஐந்து ஆண்டு காலமாக தற்காலிக கொட்டகைகளில் பெரும்சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இதற்கான நிரந்தரக்கட்டடம் கடந்த ஆண்டுகளில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், பொதுச் சந்தைக்குரிய காணிப் பிணக்கு காரணமாக அமைக்கப்படுவதில் பின்னடைவு ஏற்பட்டது.

இதற்கான காணிப் பிணக்கு கடந்த ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட்டதையடுத்து. தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிதியிலிருந்து சுமார் 9 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் இவ் வருட இறுதிக்குள் நிறைவு பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## வணிகமும் கணக்கீடும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கு வணிகமும்கணக்கீடும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய இருதினங்கள் காலை 8.30 மணி தொடக்கம் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நடைபெறுமென துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கு மேற்படி பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளதால் பாடசாலைகளுக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (2-15)

# சேயா கொலை தொடர்பான வழக்கினை உயர்நீதிமன்றுக்கு மாற்றக் கோரிக்கை

கொட்டதெனியாவ சிறுமி சேயா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை உயர் நீதிமன்றிற்கு மாற்றுமாறு புலனாய்வுப் பிரிவினர் நீதவான் நீதிமன்றிடம் கோரியுள்ளனர்.

சேயா கொலை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மினுவாங்கொட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு விசாரணைகளை உயர் நீதி மன்றிற்கு மாற்றுமாறு புலனாய்வுப் பிரிவினர் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதவான் டி.ஏ. ருவன பத்திரண அறிவித்துள்ளார்.

சேயா கொலை தொடர்பிலான முழு விசாரணைகளையும் நடத்தி சகல ஆவணங்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடந்த 30 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட பாடசாலை மாணவரின் மடிக்கணனியில் காணப்பட்ட தகவல்கள் குறித்து, மொரட்டுவ பல்கலைக்கழகம் நடத்திய விசாரணை அறிக்கையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளை உயர் நீதிமன்றிற்கு மாற்றுவது குறித்து நீதவான் நேற்று முன்தினம் எவ்வித அறிவிப்பினையும் விடுக்கவில்லை. அடுத்த வழக்குத் தவணையில் இது குறித்து அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7-10)





# பயங்கரவாதத்திற்குள் மறைந்து கொண்டு குற்றங்கள் இழைத்தோருக்குத் தண்டனை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத்திற்குள் மறைந்து கொண்டு கொலைகளை செய்த, ஆட்களை கடத்தியவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். எனவே உண்மையைக் கண்டறிய வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் பயங்கரவாத்திற்கு எதிராக அர்ப்பணிப்பு செய்த படையினரின் கௌரவத்தை பாதுகாக்க முடியும் என்று அமைச்சர் சம்பிகக ரணவக்க தெரிவித்துள்ளார். உண்மையை கண்டறிவது நாட்டை காட்டிக் கொடுப்பதென்பது பொய்யான தேசப் பற்றாளர்களின் விதண்டாவாதமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.**



இது. தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும தெரிவித்திருப்பதாவது,

உண்மையை கண்டறிய வேண்டியது அவசியமாகும். நாட்டில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக இன்னமும் உண்மைகள் வெளிவரவில்லை. லலித்தை கொன்றது புலிகளா? பிரேமதாஸவா? பிரேமதாஸவை கொலை செய்தது புலிகளா? சொத்தி உபாலியா? என்பது எமக்கு தெரியாது.

அதேபோன்று மூதூரில் 17 பேர் கொலை செய்யப்பட்டது மற்றும் தமிழ் எம்.பிக்களை கொலை செய்தது யாரென்பது தெரியாது? இது வரை காலமும் இக் கேள்விகளுக்கு பதில் கிடைக்கவில்லை.

எனவே இவை தொடர்பில் உண்மையை கண்டறிவது நல்ல விடயம் தானே?

எனவே உண்மையை கண்டறிவதற்கு தேசிய வேலைத் திட்டமொன்று அவசியமாகும்.

நாம் படையினரையும் நாட்டையும் காட்டிக் கொடுப்பதாக இதனை அர்த்தப்படுத்த முடியாது. விசாரணைகளின் பின்னரே இது தொடர்பான தீர்மானத்திற்கு வர முடியும். எக்னெலிகொடவை கொலை செய்தது நான் என்ற ஒரு குற்றச்சாட்டு காணப்பட்டது.

ஆனால் இன்று இதனைச் செய்தது யார்? எவரது தேவைக்காக இது மேற்கொள்ளப்பட்டது என்பது தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றது.

எனவே உண்மையை கண்டறிவதன் மூலம் இவ்வாறான பொய்களை கூறியவர்களின் பின்புலம் வெளியே வரும்.

இன்று தம்மை தேசப் பற்றாளர்களாக மார்தட்டிக் கொண்டு கூச்சலிடுவோர் அன்று ஹபரணைக்கு அப்பால் போகவில்லை. நாம் உயிரை மதிக்காது நாட்டுக்காக செயற்பட்டோம். மகிந்த ராஜபக்ஷவிற்கு நாம் கட்டுப்பட்டிருந்தால் "மாவிலாறிலிருந்து" யுத்தம் ஆரம்பித்திருக்கமாட்டாது. இன்றைய வீரர்கள் அன்று இருக்கவில்லை.

சந்திரிகாவுக்கு 2000 ஆம் ஆண்டில் தினேஷ்போன்றவர்கள் கட்டுப்பட்டனர். அதேபோன்று நாமும் கட்டுப்பட்டிருந்தால் 'சுனாமிக்கு பின்னரான இடைக்கால அதிகாரம்" புலிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

## மீனவர்களுக்கு அபராதம் விதிப்பது தொடர்பாக இந்தியா எச்சரிக்கை!

இந்திய கடல்பகுதிக்குள் ஊடுருவும் இலங்கை மீனவர்களுக்கு அபராதங்களை விதிக்கும் யோசனையை பரிசீலிக்க வேண்டியேற்படும் என்று இந்தியா எச்சரித்துள்ளது.

இலங்கை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் பிரவேசித்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று இலங்கையின் மீன்பிடித் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இந்திய துணை அமைச்சர் பொன் ராதாகிருஸ்ணன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கருணாநிதியை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்(இ-7-10)

## சகல அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்கக்கோரி சம உரிமை இயக்கத்தினர் துண்டுப்பிரசுர விநியோகம்

அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய், மக்களுக்கு எதிரான அனைத்து அடக்குமுறை சட்டங்களையும் உடனடியாக நீக்கு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள் சம உரிமை இயக்கத்தினரினால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டன.

துண்டுப் பிரசுர விநியோகத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார கருத்து தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. இன்றுவரை யுத்தத்தில் பலியாகிய மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. காணாமற் போனவர்கள் சம்பந்தமான பிரச்சினை, சொத்துகளை இழந்த மக்களின் பிரச்சினை என்ற ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் மக்களிடையே காணப்படுகின்றன.

இவற்றில் அரசியல் கைதிகள் என்ற பிரச்சினையானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இவர்கள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கடந்தகாலங்களில் சாகும் வரையிலான போராட்டங்களை முன்னெடுத்தனர். இதனிடையே நாட்டில் பல்வேறு சிவில் அமைப்புக்கள் உட்பட பல்வேறு தரப்பினர்களை அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கும் வகையில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனிடையே அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யாது சிலருக்கு மாத்திரம் பிணை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கம் அண்மையில் தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு மக்கள் முப்பது வருட யுத்தத்தினால் துன்பப்பட்ட சமூகம். யுத்தம் வடக்கு, கிழக்கில் பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. மனித உயிர்கள் மற்றும் உடைமை இழப்புக்கள் மட்டுமல்ல, யுத்தத்திற்குள் சமூகம் என்ற வகையில் மனச்சாட்சியையும் பறிதெடுத்துள்ளது.

யுத்தத்திற்குப் பின்பு சமூக உணர்வில் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் நிலவிய சந்தேகம் மற்றும் அவநம்பிக்கை இன்றும் தொடர்கின்றன. எனவே நாம் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதனை தடுப்பதற்கான வழிமுறை பற்றியே சிந்திக்க வேண்டும்.

தற்போது குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்களை விடுதலை செய்வதாக அரசாங்கம் கூறுகிறது. அது கூட புதிதாகச் சொல்லும் அரசியல் கருத்தாகவே பார்க்க வேண்டும். குற்றமிழைக்காதவர்களை வருடக்கணக்கில் சிறையில் அடைத்து வைத்திருப்பது வெட்கக்கேடான விடயம்.

எனவே அரசியல் கைதிகள் விடயம் உட்பட எமது ஜனநாயக உரிமைகளை எமது கரங்களால் வென்றெடுக்க அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மாணவர்களின் போராட்டமானது தேவையற்றதாகும்- கிரியெல்ல

(கொழும்பு)

உயர் தேசிய கணக்கீடு டிப்ளோமா பாடநெறி தொடர்பான அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என உறுதி யளித்த நிலையிலேயே மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இது தேவையற்றதாகும் எனத் தெரிவித்துள்ள உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபி விருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

இது தொடர்பான முழுமையான விபரங்கள் விரைவில் வெளியிடப்படுமென்றும் தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாணவர்களின் அனைதது கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி உயர் தேசிய கணக்கீடு டிப்ளோமா பாடநெறி தொடர்பாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அந் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இதன்போது அவர்களது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டது. உயர் தேசிய கணக்கீடு டிப்ளோமாவுக்கு பட்டப்படிப்பு அந்தஸ்து வழங்கப்படுவதற்கான சுற்று நிருபம் 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.


ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் அந்த அந்தஸ்தினை வழங்குவதை இரத்துச் செய்துள்ளனர்.



புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் கல்வி அமைச்சு ஊடாக அரச நிர்வாக அமைச்சிற்கு உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறிக்கு பட்டப்படிப்பு அந்தஸ்தை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மாணவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்தினோம்.

இவ்வாறு கோரிக்கைகளை வழங்கு வதற்கு உறுதியளிக்கப்பட்ட நிலையில் இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அர்த்தமற்றசெயற்பாடாகும்(இ-7-10)

# பல்துறை ஆராய்ச்சி பேரறிஞர் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை



அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் வாழ்ந்து வந்த மூதறிஞர் முனைவர்ஆ.வேலுப்பிள்ளைநேற்று முன்தினம் (02. 11.2015) இலங்கை நேரப்படி முற்பகல் 10 மணிக்கு காலமானார் என்ற செய்தியை அவரின் சகோதரியான திருமதி பரமேஸ்வரி சிவகுமாரன் மூலம் அறிந்தோம். இம்மாதம் 21 ஆம் திகதி தமது 79 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடித் தொடர்ந்தும் தமிழ்ப்பணி புரியவிருந்த பேராசிரியரின் மரணம் தமிழ் கூறும் நல்லுலகை அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த துயரத்திற்கும் உள்ளாகியிருக்கின்றது. இலங்கையில் உள்ள தமிழ்ப்பேராசிரியர்களுக்குள்ளே மூத்த வயதினரான பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களை இந்த வயதிலும் எந்த நோயும் அணுகவில்லை. ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது போல கடந்த மாதம் 25ஆம் திகதி அதிகாலை குளியலறையில் வழுக்கித் தலையடிபட வீழ்ந்தமை தான் இவரின் மரணத்திற்குக் காலாக அமைந்தது. நினைவிழந்த நிலையில் குடும்பத்தவரால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பேராசிரியர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஒரு வாரமளவில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து காலமாகியுள்ளார்.

தமது கற்பித்தற் பணி மூலமும் எழுத்தாக்கப் பணி மூலமும் இலங்கையில் உள்ளவர்களால் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள பெயர்பெற்ற அறிஞர்களாலும் நன்றியுணர்வோடு பேசப்படும் பேராசிரியர் 1936ஆம் ஆண்டு தென்புலோலியிலே ஆழ்வாப்பிள்ளை உமையாத்தை தம்பதியரின் மூத்த புதல்வராகத் தோன்றினார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பாடத்திலே முதலாம் வகுப்பிலே சித்தி பெற்று 1960 இல் துணை விரிவுரையாளரானார்..

தமது 28 வயதுக்குள் இலங்கையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தலைமையிலும் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக த்திலே பேராசிரியர் தோமஸ் பரோவின் வழிகாட்டலிலும் தமிழ்ச்சாசனங்களின் மொழி தொடர்பாக ஆய்வு செய்து இரட்டைக் கலாநிதியானார்.

பேராதனைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பவற்றிலே பல்லாண்டுகள் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிபுரிந்த பின்னர் 1990 ஆம் ஆண்டின் பின்னர் சுவீடன் நாட்டின் உப்சாலா (Uppsala) பல்கலைக் கழகத்திலும் நிறைவாக அமெரிக்க நாட்டின் வேர்ஜினியப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

பேராசிரியர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவை சாசனவியல் மரபிலக்கணம், மொழியியல், இலக்கிய வரலாறு, சமய வரலாறு எனும் துறைகளுள் அடங்குகின்றன. தமிழிலே எழுதப்பட்ட நூல்களாக சாசனமும் தமிழும் தமிழ் வரலாற்று இலக்கணம் தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் தமிழர் சமய வரலாறு ஈழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாறுதேடல், ஈழத்து அறிஞர் ஆளுமைகள், சைவசமயம் அன்றும் இன்றும் எங்கும், கதம்பக் கட்டுரைகள் (அச்சில்) என்பன திகழ்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை பல பதிப்புக்கள் கண்டவை.

பேராசிரியர் உப்சாலா பல்கலைக்கழகத்திலே பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலே இவரது 60ஆவது வயதில் (1996) இவரால் எழுதப்பெற்ற ஞான சம்பந்தருடைய சமண பௌத்த கண்டனம், நாவுக்கரசருக்கு சைவசமயத்தில் உள்ள இடம், சுந்தரருடைய சைவம் பற்றிய பார்வை, மணிவாசகருடைய பௌத்த கண்டனம் பற்றிய ஆய்வு என்பனவற்றை உள்ளடக்கிய வகையில் அமைத்து ஆய்வுக்கு அப்பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இது இவர் பெற்ற 3 ஆவது கலாநிதிப் பட்டம் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

பேராசிரியரின் பணியுயர்வையும் புகழையும் அகில உலகெங்கும் எடுத்துக்காட்டுவதாக இவரின் 75 ஆவது பிறந்ததினத்தின்போது ஆங்கிலேய அறிஞர்களான பீற்றர் சொக், றுத்வான் நகல் ஆகியோரால் வெளியிடப்பெற்ற The Tamils: From the past to the present. தமிழர்: அன்றிலிருந்து இன்று (2011) எனும் நூல் திகழ்கின்றது.

கலாநிதி வேலுப்பிள்ளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத் திலே பணியாற்றிய காலத்திலே அதன் தமிழ் மன்றக் காப்பாளராகவும் பணியாற்றி அம்மன்றத்தின் வெளியீடான தமிழோசை இதழ் சிறப்பாக வெளிவர உந்துசக்தியாக அமைந்தார். இன்று தமிழ்த் துறைக்கு அரிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களிற் பலரும் விரிவுரையாளர்களிற் பெரும்பாலானோரும் பேராசிரியர் வேலுப்பிள்ளையிடம் கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பேராசிரியர்களான சி.தில்லைநாதன், அ.சண்முகதாஸ், நா.சுப்பிரமணிய ஐயர், சி.மௌன குரு, க.அருணாசலம்(அமரர்), துரை மனோகரன், வல்லிபுரம் மகேஸ்வரன், கிருஷ்ணபிள்ளை விசாகரூபன், ம.இரகுநாதன், இ.பாலசுந்தரம், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், கலாநிதி செல்வரஞ்சிதம், சிவசுப்பிரமணியம், பொ.செங்கதிர்ச்செல்வன், கணபதிப்பிள்ளை அருந்தாகரன், க.இரகுபரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பேராசிரியர் வேலுப்பிள்ளையின் பிரிவினால் அதிகமாகத் துயருறும் அவரின் துணைவியார் திருமதி மீனாட்சி வேலுப்பிள்ளை, பிள்ளைகளான திருமதி சிவப்பிரியை கேதீசன், அருளாளன், பேரப்பிள்ளைகளான இளங்கோ, வன்னி, சகோதரியான திருமதி பரமேஸ்வரி சிவகுமாரன் ஆகியோரும் உறவினர்களும் பேராசிரியர் மேற்கொண்ட கல்விப் பணி, தமிழ்ப்பணி மூலம் பேராசிரியர் என்றும் பேசப்பட்டுக் கொண்டிருப்பார் என்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

முருகேசு
கௌரிகாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். தேசிய
கல்வியியற் கல்லூரி.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சதுரக்கள்ளி

**Botanical Name:** Euphorbia antiquorum
**Family:** Euphorbiaceae
**Sinh:** Daluk

பெருஞ்செடி வகையைச் சார்ந்தது. 30 செ.மீ விட்டமுடைய தண்டைக் கொண்டது. உருளை வடிவான அல்ல துட்டையானது. தடித்த பட்டை. கரடு முரடாக இருக்கும். பல கிளைகள் விட்டிருக்கும். தண்டுகள் மேல் நோக்கி வளைந்திருக்கும். இளந்தண்டுகளில் 4 அடுக்கு காணப்படும். மிகச் சிறிய இலைகள். இள மரங்களில் காணப்படும். குறுகிய காலத்தில் இலைகள் விழுந்து விடும். முட்கள் காணப்படும். ஒழுங்கான பூக்கள் ஒருபாலானவை. பச்சை கலந்த மஞ்சள் நிறமுடையவை. பழங்கள் 3 சோனைகளையுடையது. புரட்டாதி, மாசி மாதங்களில் பூக்களைக் காணலாம்.

வறண்ட பிரதேசங்களிலும் கல் பிரதேசங்களிலும் (Rocky places) இதன் பரம்பல் அதிகமாக காணப்படும்.

### சதுரக்கள்ளியின் மருத்துவ குணங்கள்


இதன் சாறு பால் போன்றது. உடலில் பட்டால் எரிச்சல் ஊட்டும் தன்மையுடையது. இதன் தண்டு பால் வேர் ஆகியவை மருத்துவ பயனுடையவை. இது நச்சு மூலிகைகளில் ஒன்றாக கருதப்படுவதால் மருந்தாகப் பயன்படுத்தும் போது மிகவும் கவனமாக கையாளவேண்டும்.

சதுரக்கள்ளியின் தண்டு நோய்நீக்கி உடல்தேற்றும். கள்ளிப்பால் வயிற்றுப் போக்கு உண்டாக்கும். உடலில் பட்ட இடத்தை தடிக்கச் செய்து புண் உண்டாக்கும். நஞ்சு நீக்கும்.

உடலில் தோன்றும் பாலுண்ணிகளுக்கு (மருவு) சதுரக்கள்ளி பாலை ஈக்கினால் தொட்டு வைத்து வர கரைந்து போகும்.

கள்ளிப்பாலைதடவி அம்மரத்தடியிலுள்ள மண்ணைத் தூவி வர மூட்டு வீக்கம், மூட்டு வலி, பிடிப்பு ஆகியவை குணமாகும். (இவ்வாறு பயன்படுத்தும் போது தோலில் எரிச்சல் கண்டால் உடனே கழுவி விட்டு தேங்காயெண்ணெய் தடவுக.

சதுரக்கள்ளியை இடித்தெடுத்து சாற்றின் சோற்றுப் பையும் பொரித்த வெங்காரத்தையும் சம அளவாக குழம்பு பதமாய் அரைத்து தடவி உலர விட வீக்கம், வலி, பிடிப்பு ஆகியவை குணமாகும்.



இளம் கள்ளி தண்டினை தணலில் வாட்டி நகச்சுற்றுக்கு வைத்துக் கட்ட நகச்சுற்று தொடக்க நிலையாகவிருப்பின் அமுங்கி விடும். முதிர்ந்த நிலையாய் இருப்பின் பழுத்து உடைந்து ஆறும்.

சதுரக்கள்ளிப்பாலில் புளி, சீரகம்சம அளவுசேர்த்துமெழுகு போல் அரைத்து வைத்துக் கொண்டு ஒன்று அல்லது இரண்டு குன்றியளவு உள்ளுக்கு கொடுக்க பேதியாகும். ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் (7அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை) கொடுத்துவர மூட்டு வீக்கம் யானைக் கால், வாதம், கரப்பான், சொறி, கபநோய்கள், குன்மம், காணாக்கடி சூலை, குட்டம் ஆகியவை தீரும்.

கள்ளி வேர்ப்பட்டையை நரம்புச் சிலந்தியில் கட்டி வர குணமாகும்.

சதுரக்கள்ளி, ஆடாதோடை, ஆமணக்கு , ஊமத்தை, எருக்கு, கண்டங்கத்தரி, கையாந்தகரை, தழுதாளை, நொச்சி ஆகியவற்றின் வேர் வகைக்கு 100 கிராம் ஒன்று இரண்டாய் இடித்து 20 லீற்றர் நீரில் இட்டு 4 லீற்றர் ஆகும்வரை வற்றக்காய்ச்சி வடிகட்டியதில் சுக்கு திப்பிலி, கோஷ்டம், கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லி வற்றல், திப்பிலிமூலம் சிற்றரத்தை, செஞ்சந்தனம், தாமரை வளையம், கடுகு, பூண்டு, முத்தக்காசு, அதிமதுரம், வாய்விடங்கம், முசு முசுக்கை வேர், இந்துப்பு வகைக்கு 5 கிராம் இடித்து மேற்கண்ட கியாழத்தால் நெகிழ அரைத்துக் கலந்ததுடன் நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் வகைக்கு 1 லீற்றர் கலந்து சிறு தீயில் பதமுறக் காய்ச்சி வடித்துக் வைத்துக் கொண்டு இதில் சிறிதளவு தலை, உடம்பில் நன்கு தடவி வைத்திருந்து வெந்நீரில் முழுகி வர வாத நோய்கள் தீரும். வாத வலியுள்ள இடங்களில் இத் தைலத்தைத் தடவி வைத்திருந்து வெந்நீரில் ஒற்றடம் கொடுத்து வர வாதவலி குறையும்.

சதுரக் கள்ளித் தண் டைச் சுட்டுச் சாம்பலாக்கிப் புண்களின் மீது தூவி வர உலரும்.

கள்ளிப் பால் வீக்கங்கள், பல் வலி முதலிய நோய்களுக்கும் உதவும். பாலை நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து பல் வலி சூலை நோய்க்கு மேற் பூச்சாக உபயோகிக்கலாம்.

இதன் வேருடன் பெருங்காயம் சேர்த்து வயிற்றுக் கிருமியால் வருந்தும் குழந்தைகளிற்கு வயிற்றின் மீது பூசலாம்.

இதன் பாலுடன் எண்ணெய் கலந்து மலக் கட்டுக்காக உள்ளுக்குக் கொடுக்கப் பேதியாகும்.

அடிமரத்தின்பட்டையைக் கசாயமிட்டு சூலைநோய்க்குக் கொடுக்கப்படும். அன்றியும் நரம்பு நோய் பாண்டு பாரிசவாயு, செவிடு போன்றவற்றிற்கும் உபயோகப் படும்.

பாலும் இதன் பிசினும் எண்ணெயில் கலந்து கண்டமாலை, கிரந்தி முதலியவற்றிற்கு பூசலாம்.

உறைந்த பாலை உள்ளுக்குக் கொடுக்க மேக நோய் தீரும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# விமான விபத்து குறித்து அறிவிக்கக்கூட விமானிகளுக்கு நேரம் கிடைக்கவில்லை

## விபத்திற்கான காரணம் குறித்து விமான நிறுவன அதிகாரி சூசகமாக தெரிவிப்பு

(மொஸ்கோ)

224 பேர் பலியான விமான விபத்து வெளிப்புற நடவடிக்கையால் தான் நிகழ்ந்தது என்று ரஷ்ய விமான நிறுவன அதிகாரி கூறியுள்ளார்.

எகிப்து நாட்டின் சுற்றுலா நகரமான ஷரம் எல் ஷேக் நகரில் இருந்து கடந்த சனிக்கிழமை ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு 224 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் ஒரு விமானம் புறப்பட்டது.

அந்த விமானம் கிளம்பிச் சென்ற 23 நிமிடங்களில் எகிப்தின் சினாய் தீபகற்ப பகுதியில் நெகேல் என்னுமிடத்தில் நடுவானில் நொறுங்கி விழுந்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 224 பேரும் பலியாகினர்.

விபத்தில் சிக்கிய ஏ-321 ஏர் பஸ் ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம் ரஷ்யாவின் 'கொமல்ய மாவியா' என்னும் கம்பனிக்கு சொந்தமானது ஆகும்.

விமானம் நொறுங்கி விழுந்த பகுதி ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்தது. இதனிடையே நாங்கள்தான் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தினோம் என்று ஐ.எஸ். தீவிரவாதிகள் அறிவித்தனர்.



எனினும் என்ன காரணத்தால் விமானம் நொறுங்கி விழுந்து விபத்துக்கு உள்ளானது என்பது குறித்து இதுவரை எந்த முழுமையான தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில். விமானம் விபத்தில் சிக்கியது பற்றி கொமல்ய மாவியா நிறுவன இயக்குநர் அலெக்சாண்டர் சிமிரோவ் மொஸ்கோ நகரில் நிருபர்களிடம் கூறுகையில்,

விபத்துக்கு உள்ளான விமானத்தில் எந்த தொழில் நுட்ப கோளாறும்கிடையாது. விமானம்பறந்தபோது மிகவும் நல்ல நிலையில்தான் இருந்தது. அதேபோல் விபத்துக்கு விமானிகளின் தவறும் காரணம் கிடையாது.

விமானம் திடீரென தனது கட்டுப்பாட்டை இழந்து விழுந்துவிட்டது. இந்த அவசர நிலை குறித்து தகவல் தெரிவிக்கக்கூட விமானிகளுக்கு நேரம் கிடைக்கவில்லை. அப்போது விமானிகள் முழுமையாக தங்களது கட்டுப்பாட்டை இழந்து இருந்தனர். இதன் காரணமாகவே தங்களுக்கு ஏற்பட இருக்கும் அபாய சூழல் குறித்து உடனடியாக அவர்களால் தகவல் தெரிவிக்க இயலவில்லை.

அந்த நேரத்தில் விமானத்தின் அடிப்பகுதியில் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டு விமானம் தொடர்ந்து பறக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

விமான விபத்து நிகழ்ந்ததற்கு சில விதமான வெளிப்புற நடவடிக்கைகள்தான் காரணம் என்ற ஒரே விளக்கத்தை மட்டுமே தர முடியும்.

எனினும் இது தொடர்பாக அவர் மேற்கொண்டு எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# ஆரோக்கியமான நாடுகள் பட்டியலில் இலங்கை 56 வது இடம்

ஐக்கிய நாடுகள் சபையின் உலக வங்கி மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள உலக ஆரோக்கிய நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் முதல் இடத்தை பிடித்துள்ளது.

பிறப்பு, இறப்பு விகிதம், இறப்புக்கான காரணம், புகைப்பவர்களின் எண்ணிக்கை, கொழுப்பு பாதிப்பு மற்றும் சத்து குறைபாடு என பல்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்து இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 ம் இடம் | சிங்கப்பூர் |
| 02 ம் இடம் | இத்தாலி |
| 03 ம் இடம் | அவுஸ்திரேலியா |
| 04 ம் இடம் | சுவிட்சர்லாந்து |
| 05 ம் இடம் | ஜப்பான் |
| 06 ம் இடம் | ஸ்பெயின் |
| 07 ம் இடம் | நெதர்லாந்து |
| 08 ம் இடம் | சுவீடன் |
| 09 ம் இடம் | ஜேர்மனி |
| 21 ம் இடம் | அமெரிக்கா, பிரிட்டன் |
| 55 ம் இடம் | சீனா |
| 56 ம் இடம் | இலங்கை |
| 97 ம் இடம் | ரஷ்யா |
| 100ம் இடம் | பாகிஸ்தான் |
| 103ம் இடம் | இந்தியா |




# விபத்தில் உயிரிழந்தோரின் சடலங்கள் ரஷ்யாவுக்கு



விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வரும் நிலையில், விபத்தில் இறந்த ரஷ்ய பயணிகளின் உடல்களை ரஷ்யாவுக்கு அனுப்பும் பணிகளை எகிப்து நிர்வாகம் விரைந்து மேற்கொண்டது.

அதன்படி 144 உடல்கள் அடங்கிய முதல் விமானம் நேற்று முன்தினம் காலையில் உள்ளூர் நேரப்படி 6 மணிக்கு செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள புல்கோவோ விமான நிலையத்தை வந்தடைந்தது. பின்னர் அந்த உடல்கள் அனைத்தும் ஒரு பெரிய லொறியில் ஏற்றப்பட்டு. அடையாளம் காண்பதற்காக அருகில் உள்ள சவக்கிடங்கு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மீதமுள்ள ரஷ்ய பயணிகளின் உடல்களை ஏற்றிக்கொண்டு 2 ஆவது விமானம் நேற்று முன்தினம் மாலையில் எகிப்தை விட்டு புறப்பட்டது. இந்த விபத்தால் ரஷ்யாவில் நேற்று முன்தினம் ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்பட்டது. (3-7)

# பாலியல் படங்கள் பார்க்கும் ஊழியர்களுக்கு ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூன் எச்சரிக்கை

ஐ.நா.சபை ஊழியர்கள் பாலியல் படங்களை பார்ப்பது, வாகனங்களின் டயர்கள் மற்றும் பெற்றோலை திருடுவது போன்ற குற்றங்களில் ஈடுபடுவது போன்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா.சபையின் தலைமையகம் நியூயோர்க்கில் செயற்பட்டு வருகிறது, இதன் கிளைகளில் 188 நாடுகளிலிருந்து 45 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகிறார்கள்.

இந்த அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கிடையே நடந்த ஒழுங்கீனங்கள் மற்றும் பணி நீக்கங்கள் தொடர்பான அறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும்வெளியாகும்

கடந்த 2014 ஆம்ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் 2015 ஜூன் 30ஆம் திகதி வரை தவறிழைத்ததால். 60 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 ஊழியர்கள் பாலியல் படங்களை பார்த்ததோடு மட்டுமல்லாமல் அதனை சக ஊழியர்களுக்கு தங்களது மின்னஞ்சல் வழியாக அனுப்பியுள்ளனர். இதனால் அவர்கள் 4 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி. அலுவலக வாகனத்தின் டயர்கள் மற்றும் பெற்றோல் திருட்டில் ஈடுபட்ட குற்றத்திற்காக 2 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அலுவலக முத்திரைகளை திருடி விற்பது போன்ற குற்றத்திற்காகவும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



ஐ.நா. சபை ஊழியர்களிடையே ஒழுங்கீனங்கள் அதிகரித்து வருவதால். விதிகளுக்கு புறம்பாக யார் செயற்பட்டாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா. சபையின் இணையத்தளத்தில் அதன் செயலாளர் பான் கீ மூன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (3-7)

# மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

## ஐ.நா. கோரிக்கை

மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் சட்ட விரோதமாக தடுத்து வைக் கப்பட்டுள்ளார். எனவே அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என ஐ.நா.குழுவொன்று கோரியுள்ளது.

ஆண் உதவியாளர் ஒருவருடன் பாலியல் உறவில் ஈடுபட்டார் எனக் கூறி, கடந்த பெப்ரவரி மாதம் அன்வர் இப்ராஹிமுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் அக்குற்றச்சாட்டை அவர் தொடர்ந்து மறுத்து வருகிறார்.

ஐ.நா.குழுவின் அறிக்கை தனது தந்தை மீது தவறில்லை என்பதை நிரூபித்துள்ளது என அவரது மகள் நூருல் இசா அன்வர் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

மலேசிய அரசு இந்த முடிவை ஏற்று அதன்படி நடக்க வேண்டும் எனவும் அன்வர் இப்ராஹிமின் மகள் வலியுறுத்தியுள்ளார். (3-7)

# அமெ.சுமத்திரா காண்டாமிருகம் ஜோடி தேடி இந்தோனேசியா வருகை

அமெரிக்க மிருகக்காட்சிசாலையில் பிறந்த அருகிவரும் ஆண் சுமத்திரா காண்டாமிருகம் ஒன்றை இனப்பாதுகாப்பு முயற்சியாக பெண் காண்டாமிருகத்திடம் இணைப்பதற்கு இந்தோனேசியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சின்சினாட்டியில் பிறந்த எட்டு வயது கொண்ட இந்த சுமத்திரா காண்டாமிருகம் மேற்கத்தேய பிராந்தியத்தில் இருக்கும் ஒரே காண்டாமிருகமாகும்.

இந்தோனேசியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் இந்த காண்டாமிருகம் அங்குள்ள காண்டாமிருக சரணாலயத்தில் பெண் சுமத்திரா காண்டாமிருகத்துடன் இனப்பெருக்கத்தில் ஈடுபடும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

காடழிப்பு மற்றும் வேட்டை காரணமாக சுமத்திரா காண்டாமிருகம் அழிவின் விளிம்பில் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த இன



காண்டாமிருகங்கள் காடுகளில் 100 க்கும் குறைவாகவே இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி ஹரபன் என்று அழைக்கப்படும் குறித்த காண்டாமிருகம் நிலம், வான் மற்றும் கடல் மார்க்கமாக 16ஆயிரம் கிலோமீற்றருக்கு அதிக தூரம் பயணித்தே இந்தோனேசியாவில் இருக்கும் சுமத்திரா காண்டாமிருக சரணாலயத்தை அடைந்துள்ளது. சிறிய வகை காண்டாமிருக இனமான சுமத்திரா காண்டாமிருகம் இரு கொம்புடைய ஒரே ஆசிய காண்டாமிருக இனமாகும்.

இதன் கொம்புகள் பாரம்பரிய சீன மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுவதால் அதிகம் வேட்டையாடப்படுகிறது. (3-7)



அமெரிக்கா. பிரித்தானியா மற்றும் இஸ்ரேல் நாட்டுக் கொடிகளை பாலஸ்தீனர்கள் நேற்று தீயிட்டு எரித்தனர். 1917ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய பல்போர் (Balfour) பிரகடனத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்தக் கொடிகள் எரிக்கப்பட்டன. 1917 பிரகடனத்தின் ஊடாக பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தாயகம் வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அணு ஆயுத திட்டங்களை உடன் நிறுத்த வேண்டும்

## வடகொரியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

**வடகொரியா தனது அணு ஆயுத திட்டங்களை உடனே நிறுத்த வேண்டும் என அமெரிக்காவும் தென்கொரியாவும் வட கொரியாவை எச்சரித்துள்ளன.**



ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி அணு ஆயுத தயாரிப்பில் வடகொரியா ஈடுபட்டு வருகிறது. மேலும் நீண்ட தூர ஏவுகணைகளையும் அடிக்கடி அந்த நாடு சோதித்து வருகிறது. வடகொரியாவின் இந்த நடவடிக்கை அமெரிக்கா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் வடகொரியாவுக்கு எதிரான அமெரிக்கா மற்றும் தென்கொரிய கூட்டுப்படைகளின் வருடாந்த ஆய்வுக்கூட்டம் தென் கொரிய தலைநகர் சியோலில் நடந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டர் மற்றும் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் ஹான் மின் கூ ஆகியோர் வடகொரியாவுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து ஆஷ்டன் கார்ட்டர் கூறும்போது. 'கொரிய தீபகற்ப பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும். தொடர்ந்து அச்சுறுத்தல் விளைவிப்பதாகவும் வடகொரியா விளங்கிவருகிறது. அந்த நாடு தனது அணு ஆயுத திட்டங்களை உடனே நிறுத்த வேண்டும்' என்று கூறினார்.

மேலும், வடகொரியாவின் இராணுவ தூண்டுதல்களை இனியும் பொறுத்துக்கொள்ளமாட்டோம் என இரு தலைவர்களும் கூட்டாக வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (3-7)

# துருக்கியில் மறுதேர்தல் ஆளும் கட்சிக்கு வெற்றி



துருக்கியில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மையை இழந்த ஆளும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி (ஏ.கே.பீ.) கடந்த ஞாயிறுக்கிழமை நடந்த தீர்க்கமான மறுதேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளது.

வாக்குகள் முழுமையாக எண்ணப்பட்ட நிலையில் ஏ.கே. கட்சி 49.4 வீத வாக்குகளை வென்றிருப்பதோடு பிரதான எதிர்க்கட்சியான சீ.எச்.பீ. 25.4 வீத வாக்குகளை பெற்றுள்ளது.

ஏ.கே. கட்சியின் நிறுவனரான ஜனாதிபதி ரிசப் தய்யிப் ஏர்துகான் வெற்றியை வரவேற்றிருப்பதோடு. நாட்டின் ஐக்கியம் ஒருமைப்பாட்டுக்கு மக்கள் வாக்களித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் குர்திஷ் ஆதரவு எச்.டி.பி. கட்சி பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வெல்ல போதுமான 10 வீத வாக்குகள் என்ற எல்லையை கடந்துள்ளது.

550 ஆசனங்கள் கொண்ட துருக்கி பாராளுமன்றத்தில் தனித்து ஆட்சி அமைக்க 276 ஆசனங்கள் தேவை என்ற நிலையில் ஏ.கே. கட்சி 316 இடங்களை வென்றுள்ளது. எனினும் ஜனாதிபதி ஏர்துகானின் அதிகாரத்தை அதிகரிக்கும் வகையில் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவருவதற்கு தேவையான சர்வஜன வாக்கெடுப்பிற்கு அழைப்பு விடுக்க ஏ.கே. கட்சிக்கு 14 இடங்கள் குறைவாக உள்ளது.

அதேபோன்று ஆளும் கட்சி மேலும் 60 ஆசனங்களை பெற்றிருந்தால் சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்லாமலேயே அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

எனினும் இந்த தேர்தல் முடிவுகள் எர்துகானின் எதேச்சாதிகாரத்தை கட்டுப்படுத்த உதவும் என்று எதிர்க் கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

ஏ.கே. கட்சியின் வெற்றிச் செய்தியைத் தொடர்ந்து துருக்கி பங்குச் சந்தை விற்பனைகள் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன.


ஜனாதிபதி ஏர்துகானின் தனிப்பட்ட வெற்றியாகவே இந்த முடிவை பலரும் பார்க்கின்றனர். (3-7)

# நேபாள துப்பாக்கிச் சூட்டில் இந்தியர் பலி; பிரதமர் மோடி கடும் கண்டனம்

இந்தியா-நேபாளத்துக்கிடையிலான எல்லைப் பகுதியான பிர்குஞ்ச்-ரக்ஸவ்ல் வீதி அருகே. நேற்று போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் இந்தியர் ஒருவர் பலியானார். இந்த சம்பவத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் புதிய அரசியலமைப்பை எதிர்த்து மாதேசி, தாரு உள்ளிட்ட பழங்குடி மக்கள் இந்திய நேபாள எல்லை பகுதியில் 40 நாட்களாக போராட்டம் நடத்தி னார்கள். இந்த போராட்டத்தில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சுமார் 100 பொலிஸார் போராட்டம் நடத்திய மாதேசி இனமக்களை விரட்டியடித்ததையடுத்து. அப்பகுதி வழியாக சரக்கு லொறிகளின் போக்குவரத்து தொடங்கியது.

ஆனால் சிறிது நேரத்திற்கு பிறகு போராட்டக்காரர்கள் மீண்டும் எல்லையில் நுழைவாயிலில் இருக்கும் பாலத்தின் அருகே போராட்டத்தில் ஈடுப்பட்டனர். மேலும் காவலர்கள் மீதும் கல் வீசி தாக்குதலும் நடத்தினார்கள்.



இதனை அடுத்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் பீகாரை சேர்ந்த ஆஷிஸ் குமார் ராம் என்ற 24 வயது இளைஞர் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக நேபாள பிரதமர் கே.பி.ஒலியிடம் பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்ததாக பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. மேலும் இந்தியாவிற்கான நேபாள தூதர் தீப் குமார் உபத்யாயாவை அழைத்து வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# எஸ். எப். லொக்காவை 24 மணி நேரம் தடுத்து விசாரணை செய்ய அனுமதி

அநுராதபுரம், பெனோர்ராமா இரவு விடுதி உரிமையாளர், கின்னஸ் சாதனை கராத்தே வீரரான வசந்த சொய்ஸாவை வெட்டிப்படுகொலை செய்தமை, அந்த விடுதியின் முகாமையாளர் உள்ளிட்ட மூவருக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்தியமை மற்றும் அவ்விடுதிக்குச் சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் கைதான அநுராதபுரம் பாதாள உலகத்தின் தலைவராக கருதப்படும் எஸ்.எப்.லொக்கா எனப்படும் இராணுவத்தின் சிறப்பு படையில் இருந்து தப்பிச் சென்ற எரான் ரண சிங்கவை 24 மணி நேரம் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்ய அனுமதி பெறப்பட்டது.

அநுராதபுரம் பிரதான நீதவான் சானக கலங்கசூரிய இதற்கான அனுமதியை நேற்று முன்தினம் பொலிஸாருக்கு வழங்கினார்.

சிலாபம் பகுதியில் கார் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த போது எஸ்.எப்.லொக்கா கைது செய்யப்பட்டார். எஸ்.எப். லொக்காவின் நண்பர் ஒருவரூடாக அவருக்கு அழைப்பை ஏற்படுத்தி அவரை சிலாபம் நகரப்பகுதிக்கு பொலிஸார் வரவழைத்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணையின் பின்னர் எஸ்.எப்.லொக்கா நேற்று முன்தினம் மன்றில் ஆஜர் செய்யப்பட்டு மேலதிக தடுப்புக் காவலுக்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதனிடையே நேற்று முன்தினம் மாலை வரை இந்த சம்பவம் தொடர்பில் 28 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய பொலிஸ் பேச்சாளர் அவர்களில் 27 பேர் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதில் நேற்று முன்தினம் 48 மணி நேர விசாரணையின் பின்னர் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட எஸ்.எப்.லொக்கா எனப்படும் எரான் ரணசிங்கவின் சகோதரர் அமில ரணசிங்கவும் சந்தேக நபர்கள் தாக்குதலுக்கு வருகை தர பயன்படுத்திய லொறியின் உரிமையாளரான அநுராதபுரம் பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரும் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 03.11.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.56 | 143.11 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.79 | 221.44 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 151.54 | 158.44 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 139.30 | 145.91 |
| டொலர் | கனடா | 105.13 | 110.06 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.38 | 103.57 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.76 | 103.07 |
| யென் | ஜப்பான் | 1.1417 | 1.1931 |

மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.9247 |
| குவைத் | டினார் | 465.7321 |
| ஓமான் | ரியால் | 366.1743 |
| கட்டார் | ரியால் | 38.7380 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.5894 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.3830 |

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 130 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300 | 300 | 350 |
| தக்காளி | 140 | 140 | 140 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 120 | 130 |
| கரட் | 140 | 80 | 60-120 | 160 | 100 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 | 40 |
| புடோல் | 100 | 80 | 100-140 | 100 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 180 | 160 | 140 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 280 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 140 | 150 | 150-180 | 240 | 180 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 200 | 150 | 120 | 240 | 140 |
| முருங்கைக்காய் | 140 | 70-140 | 140 | 200 | 200 |
| போஞ்சி | 240 | — | 180 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | — | 80 | 90 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 350 | 250 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 40 | 50 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 220 | — | 170 | — | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 50 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 30 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தேர்தலில் வென்று பண்டாரநாயக்க பிரதமர் ஆனார் 26



...போராட்டம் நடத்தினால் அது அடக்கப்படும் என்று பண்டாரநாயக்கா பதில் எழுதினார்.

ஆனால், பண்டாரநாயக்கவின் மிரட்டலுக்குத் தமிழர்கள் பயப்படவில்லை. திட்டமிட்டபடி உண்ணாவிரதம் இருக்க ஊர்வலமாகப் புறப்பட்டார்கள். இதில் செல்வநாயகம் அமிர்தலிங்கம், நவரத்தினம் உட்பட முக்கிய பிரமுகர்கள் ஊர்வலத்தின் முன் சென்றனர்.

### பயங்கரத் தாக்குதல்

பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. எனினும் 500 இற்கும் மேற்பட்ட சிங்கள வெறியர்கள் கையில் ஆயுதங்களுடனும் சிங்கக் கொடியுடனும் வந்து உண்ணாவிரதம் தொடங்கி தமிழர்களைத் தாக்கினர்.

செல்வநாயகத்தின் 14 வயது மூத்த மகன் மனோகரன், தந்தையின் கண்முன்னாலேயே அடித்து நெறுக்கப்பட்டான்.

செல்வநாயகமும் சேற்றுத் தண்ணீரில் வீசி எறியப்பட்டார்.

அமிர்தலிங்கத்தைச் சிங்கள வெளியர்கள் தடியால் தாக்கினார்கள்.

அவரது மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது.

ஊர்வலத்தினர், தமிழ் வாழ்க! என்று முழக்கமிட்டனர். அவர்களைச் சிங்கள வெறியர்கள் அடித்து நொறுக்கினர்.

தமிழ் எம்.பிக்கள் சிலர் மண்டை உடைந்து ரத்தம் சொட்டச் சொட்ட சுருண்டு விழுந்தனர். சிலரைச் சிங்களர்கள் தூக்கிச் சென்று அருகே இருந்த ஏரியில் வீசினர்.

இந்தக் கலவரத்தைப் பாராளுமன்ற ஜன்னல் வழியாகப் பண்டார நாயக்க பார்த்துக் கொண்டு நின்றார்.

### 150 பேர் பலி

இந்தக் கலவரம் கொழும்பு நகரம் முழுவதும் பரவியது. தெருவில் நடந்துபோன தமிழர்களைச் சிங்களவர்கள் ஓட ஓட விரட்டித் தாக்கினர்.

தமிழர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன.

இதில் 150 தமிழர்கள்



செல்வநாயகம்

கொல்லப்பட்டனர்.

தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய முதல் இனப்படுகொலை இது என்று கூறலாம்.

### ஒப்பந்தம்

இந்தச் சம்பவத்தால் தமிழர்கள வாழும் பகுதிகளில் பெரும் கொந்தளிப்பும் பதற்றமும் நிலவியதைப் பிரதமர் பண்டார நாயக்கா உணர்ந்து கொண்டார். தமிழர்களுடன் ஏதாவது சமரசம் செய்து கொண்டால் தவிர கலவரம் மேலும் பரவும் என்பது அவருக்குப் புரிந்தது.

செல்வநாயகத்தை அழைத்துப் பேசினார். பிரதமருக்கும் செல்வநாயகத்துக்குமிடையே 1957 ஜூலை 27 ஆம் திகதி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இலங்கையில் பிராந்திய சபைகள் அமைக்கப்படும். தமிழர்களுக்கு என்று ஒரு பிராந்திய சபை இருக்கும். அந்தச் சபையின் நடவடிக்கைகள் தமிழில் நடைபெறும்.

விவசாயம், கல்வி, குடியேற்றம் முதலியவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இந்த பிராந்திய சபைகளிடம் இருக்கும் என்று இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருந்தது.

### ஜெயவர்த்தன பாத யாத்திரை

இந்த ஒப்பந்தத்தைச் சிங்களர் கட்சிகள் கடுமையாக எதிர்த்தனர்.

ஒப்பந்தத்தை எதிர்த்து 1957 அக்டோபர் 4 ஆம் திகதி ஜெயவர்த்தனா தலைமையில் கொழும்பில் இருந்து கண்டி வரை சிங்களவர்கள் பாத யாத்திரை சென்றனர்.

ஊர்வலம் சென்ற வழி எங்கும் கல்வீச்சு நடந்தது.

இதனால் ஜெயவர்த்தனாவும் மற்றவர்களும் கார்களில் ஏறி, கண்டி வரை சென்று தங்கள் பாத யாத்திரையை நிறைவு செய்தனர்!

பண்டாரநாயக்க மந்திரி சபையில் இடம்பெற்றிருந்த விமலா விஜயவர்த்தனா, சிங்கள புத்தபிக்குகளைத்



ஏ.பி.ஜெயசூரிய

திரட்டிக்கொண்டு போய், பிரதமர் பண்டார நாயக்கா வீட்டு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

### கிழித்து எறிந்தார்

சிங்களவர் எதிர்ப்பைக் கண்டு பண்டாரநாயக்கா பயந்து போனார். சிங்களவர்களின் கோரிக்கையை ஏற்கத் தீர்மானித்து செல்வநாய கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதாக அறிவித்தார். (தொடரும்)

# 216 புலி உறுப்பினர்கள் குறித்து சட்டமா அதிபருக்கு அறிக்கை

(கொழும்பு)

**216 தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரோஹன புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக கைதிகள் தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என அரசாங்கம் வழங்கிய உறுதி மொழிக்கு அமைய, இந்த அறிக்கை சிறைச்சாலை திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மகசீன் உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் அண்மையில் உணவு தவிர்ப்பு போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் மற்றும் வழக்குத் தொடரப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் அறிக்கை தயாரித்து வழங்குமாறு சிறைச்சாலை தலைமையகத்திற்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்திருந்தது.

கொழும்பு, மகசீன், அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, களுத்துறை, பல்லேகலே உள்ளிட்ட சிறைச்சாலைகளில் 216 தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பிலான விசேட அறிக்கையொன்று சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஸ்பகுமார சிங்கள ஊடகமொன்றுக்குத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# பசில் சமுர்த்தி நிதியத்தில் கை வைக்கவில்லையாம்

## எஸ்.பி.திஸாநாயக்க பெருமிதம்

சமுர்த்தி நிதியத்தில் பசில் ராஜபக்ஷ கை வைக்கவில்லை என சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மரணமொன்று சம்பவித்தால் சடலத்தின் சூடு ஆறுவதற்கு முன்னதாக சமுர்த்தி நிதி கொடுக்கப்பட வேண்டும்.

குழந்தை பிறந்தால் முடி இறக்குவதற்கு முன்னதாக தாயின் தலையணைக்கு அடியில் சமுர்த்தி நிதி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.



பணம் தொடர்பிலான பிரச்சினை இருந்தால் எனக்கு அறிவிக்கவும்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு நான் நன்றி பாராட்டுகின்றேன். ஏனெனில் நான் தொடங்கிய எந்தவொரு நிதியத்திலும் பசில் ராஜபக்ஷ கை வைக்கவில்லை.

திறைசேரியில் எந்தவிதமான பிரச்சினையும் இன்றி பணம் பெற்றுக்கொண்டதனால் பசில் சமுர்த்தி நிதியில் கை வைக்கவில்லை.

சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மாதாந்த வட்டியே 500 மில்லியன் ரூபாவாக காணப்படுகின்றது என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இராணுவப் புலனாய்வுப்பிரிவின் உயர் அதிகாரியிடம் விசாரணை

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பாக கடமையாற்றி வரும் உயர் அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

குறித்த புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரி, பொலிஸ் பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எக்னெலிகொடவை அழைத்துச் சென்றதன் பின்னரே காணாமற்போயுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எக்னெலிகொட கிரித்தலே இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதனை, கைது செய்யப்பட்டுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (இ-7-10)

# பதவி வழங்கப்படாமை குறித்து கட்சி ஆதரவாளர்கள் அதிருப்தி

## புத்திக்க பத்திரண தெரிவிப்பு

பதவி வழங்கப்படாமை குறித்து என்னை விடவும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அதிகளவில் வருந்துவதாக மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

எனது அரசியல் வாழ்க்கையில் பதவிகள் பட்டங்கள் வழங்கப்படாமை எனக்குப் பிரச்சினையில்லை. பதவி கிடைக்கவில்லை என்று மாத்தறை மாவட்ட கட்சி ஆதரவாளர்களே கவலைப்படுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி நெருக்கடியான தருணத்தை எதிர்நோக்கிய காலத்தில் கட்சி உறுப்பினர்களை பாதுகாத்து பச்சைக் கொடியின் கீழ் ஆதரவாளர்களை அணி திரட்டியிருந்தேன்.

எனது இந்த தலைமைத்துவம் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பதவி வழங்கினால் என்னிடமிருந்து இன்னமும் அதிகளவு பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என மக்கள் கருதுகின்றார்கள். நான் கட்சியையும் கட்சி ஆதரவாளர்களையும் பாதுகாப்பேன்.

கட்சியை காட்டிக் கொடுப்பதில்லை என இரத்தத்தில் எழுதி



கையொப்பமிட்டே நான் இந்த பயணத்தை தொடங்கினேன் என புத்திக்க பத்திரண மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## பரதன்...

"என்னை யாரும் சரியாக புரிந்துகொள்கிறார்களில்லை சார்!'' என்றார் ஒருவர். ''இராமாயணத்தில் வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே'' என்றேன்.

"என்ன சார் திடீரென்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்'' என்றார். இதோ பாருங்கள்! என்று எனக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை அவரிடம் காட்டினேன். அதில் இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துவிடும். இராமாயணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம் – பரதன். அப்படிப்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஏன், பெற்றதாயே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! புரிந்து கொண்டிருந்தால் என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பாரா?

இது தன் பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்தத் தாயாருக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவன் வந்து திட்டும் போதுதான் அவன் எப்படிப் பட்டவன் என்பது அவருக்குப் புரிகிறது! சரி... அப்பாவாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டாரா?

அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விடயம் அவருக்குத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியிடம் "நீ எனக்கு மனைவியில்லை'' என்று சொன்னதோடு நிறுத்தாமல் "உன்மகன் பரதன் எனக்கு மகனல்ல!'' என்று வேறு சொல்லிவிட்டாரே!

சரி... அமைச்சர்களாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா? அதுவுமில்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன் வீட்டிலிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வரும் போது அவரிடம் என்ன.. முடிசூட்டுவிழா ஏற்பாட்டைச் செய்யலாமா? என்று கேட்கிறார்கள்.

பரதனை குகன் கூட சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இவன் தாயை வெறுத்து கோபமாகப் பேசிவிட்டு மரவுரி தரித்து அண்ணனைப் பார்ப்பதற்காக காட்டுக்கு வரும் போது அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு அவனோடு சண்டையிடத் தயாரானான். இராமன், இலட்சுமணனாவது பரதனைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா?

பரதனைக்கண்ட இலட்சுமணன் கோபப்படுகிறான். இராமர் அவனைச் சாந்தப்படுத்தி பரதனைக் கூப்பிட்டு, "தம்பி... அரசாட்சி உனக்குச் சுகம் தருகிறதா?'' என்று கேட்கிறார். அவனைப் புரிந்துகொண்டிருந்தால் அப்படிக் கேட்டிருப்பாரா? இப்படிப் பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய குணச்சித்திரம் தான் பரதன்.

ஆனால் பரதனைப் புரிந்துகொண்ட சிலரும் இராமாயணத்தில் உண்டு. பரதனைக் கண்ட குகன் யுத்தத்துக்குத் தயாராகும் போது, வேடர்களையெல்லாம் போருக்கு வருமாறு அழைக்கிறான். அவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். குகனுக்கு கோபம் வந்தது. "ஏன் இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்கிறான். அதற்கு அவர்கள்,

"தலைவா! பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரித் தெரியவில்லையே! இவனும் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக்கோலத்தில் அல்லவா வருகிறான்... இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்?'' என்கிறார்கள்.

விடயம் தெரிந்தவர்களாலேயே சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பாமர மனிதர்களான வேடர்கள் ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டார்கள் பார்த்தீர்களா! என்று என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தவரிடம் சொன்னேன். அவர் ''சார்... இப்ப நீங்கதான் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை!'' என்றார். "என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

"இவ்வளவு விபரமும் உங்களுக்கு எழுதி அனுப்பிய வாசகரே நான்தான் சார்... என்னிடமே கதை அளக்கிறீர்களே!'' என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

45

## "நந்தனார்" படத்தில் நடிக்க சுந்தராம்பாளுக்கு ரூ.1 லட்சம்

...சுந்தராம்பாள் யோசித்தார். அட்வான்ஸ் வாங்கிய பிறகு மறுப்பது சரியல்ல; அத்துடன் நாடகத்தில் நடித்த அதே வேடத்தில் நடிப்பது தவறில்லை என்று எண்ணினார். நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்தார்.

அக்காலத்தில் ஒரு லட்ச ரூபாய் இருந்தால் முழுப்படத்தையும் தயாரித்துவிடலாம்.

ஒரு பவுன் விலை 13 ரூபாய்தான். அப்படியிருக்க சுந்தராம்பாளுக்கு ரூ. 1 லட்சம் கொடுக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில பெரிய தலைப்புடன் பிரசுரிக்கப்பட்டது. ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந்தப் படத்தை எம்.எல். டாண்டன் டைரக்ட் செய்தார். துணை இயக்குநர்,, பிற்காலத்தில் டைரக்ஷனில் பெரும் சாதனைகள் புரிந்த எல்லிஸ் ஆர்.டங்கன்.

படப்பிடிப்பு கல்கத்தாவில் நடந்தது. சங்கீத வித்வான் மகாராஜபுரம் விசுவநாத அய்யர், வேதியராக நடித்தார். அவருடைய சம்பளம் 3 ஆயிரம்.

படத்துக்கு 3 லட்ச ரூபாய் செலவிட்டார், அசன்தாஸ். மூன்று மாத காலம் தொடர்ந்து படப்பிடிப்பு நடந்தது.

படத்தில் மொத்தம் 41 பாடல்கள் இடம்பெற்று இருந்தன. அதில் சுந்தராம்பாள் பாடியவை 19.

**தோல்வி**

சுந்தராம்பாளின் பாடல்கள் அருமையாக அமைந்தபோதிலும படம் சுமாராகவே ஓடியது. படம் நன்றாக இல்லை என்பதே பத்திரிகைகளின் பொதுவான விமர்சனம்.

இதில் வருந்தத்தக்க செய்தி என்னவென்றால், 1936 நவம்பரில் கல்கத்தா நியூ தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் ஏற்பட்ட தீ விபத்தில் இந்தப் படத்தின் நெகட்டிவ் எரிந்து போயிற்று.

15 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு கேட்டு ஸ்டுடியோ மீது அசன்தாஸ் வழக்குத் தொடர்ந்தார். அவர்கள் 9 ஆயிரம்



தான் தர முடியும் என்று கூறி அந்தத் தொகையைக் கோர்ட்டில் கட்டினார்கள்.

**மணிமேகலை**

அடுத்த கே.பி.எஸ்.நடித்த திரைப் படம் மணிமேகலை.

மாதவியின் மகளாகப் பிறந்து, துறவியாக வாழ்ந்த மணிமேகலை வேடத்தில் சுந்தராம்பாளும் உதய குமாரனாக கொத்மங்கலம் சீனுவும் நடித்தனர்.

இப்படத்தில் என்.எஸ். கிருஷ்ணன்- டி.ஏ.மதுரம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்தப் படம் வெற்றிகரமாக ஓடியது. சுந்தராம்பாள் இப்படத்தில் சிறைச்சாலை என்ன செய்யும்? என்ற பாடலைப் பாடினார். (தொடரும்)



நந்தனார் படம் தயாரானபோது எடுத்த படம். படத்தில் இருப்பவர்கள்:- பட அதிபர் அசன்தாஸ், திருமதி வில்லியம் மோய்லன், கே.பி.சுந்தராம்பாள், எல்லிஸ் ஆர்.டங்கனின் தாயார், டைரக்டர் எம்.எல். டாண்டன், எல்லிஸ் ஆர்.டங்கன்.

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 313

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...உங்களால் எல்லாவற்றையும் ஆச்சரியம் ததும்பும் மனோ பாவத்துடனும் வியப்புடனும் நோக்க முடியுமானால் அது உங்களை மிகுந்த நன்றியுணர்வாலும் மன நிறைவாலும் நிரப்புகிறது.

ஏனெனில் அந்த சமயத்தில் நீங்கள் கேள்வி எதுவும் கேட்பதில்லை.

நீங்கள் உங்கள் மனதை விளையாட அனுமதிப்பதில்லை. நீங்கள் வெறுமனே உங்கள் இதயத்துடன் ஒத்திசைந்து கொண்டு இருக்கிறீர்கள்.

அப்பொழுது நீங்கள் ஒரு குழந்தையாகிவிடுகிறீர்கள். நீங்கள் ஒரு குழந்தையாகிவிடும் பொழுது எதுவுமே சலிப்பாக இருப்பதில்லை. எல்லாமே அற்புதமாகத்தான் இருக்கிறது!

அதனால்தான் குழந்தைகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறார்கள்.

அவர்கள் மனம் உயிரற்றுப் போய்விடுவதில்லை. அது புத்துணர்ச்சியுடன் பிரவகிக்கும் தன்மையுடனும் இருக்கிறது.

சமூகம் இன்னும் அவர்களுடைய மனதை பழக்கமான வடிவ அமைப்புக்களால் நெறிப்படுத்திவிடவில்லை.

எல்லாவற்றையும் ஒரு நன்றியுணர்வுடனும் வியப்புடனும் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்; உதாரணத்திற்கு உங்கள் சொந்த உடலையே எடுத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது



வெறுமனே இந்த சின்னப் பயிற்சியை முயற்சி செய்யுங்கள்!

கீழே அமர்ந்து கண்களை மூடிக் கொள்ளுங்கள். ஒரு சின்ன விபத்தில் உங்கள் வலது கைச் சுண்டுவிரல் துண்டாகிவிட்டதாக வெறுமனே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் சுண்டுவிரல் அதன் அசலான அளவில் இப்பொழுது முக்கால் பாகம்தான் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் உடலில் வேறு எந்தவிதமான உருவச் சிதைவும் இல்லை. எல்லாம் சரியாக இருக்கும் உடலையே பெற்றிருக்கிறீர்கள். திடீரென்று உங்கள் சுண்டுவிரல் மட்டுமே துண்டாகிவிட்டது.

உங்களுடைய எதிர்ச் செயல் எவ்வாறு இருக்கும்? உங்களுக்கு அதை ஜீரணிப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கும். நீங்கள் உங்கள் கையை உபயோகப்படுத்திச் செய்யும் ஒவ்வொரு சின்ன செயலிலும், உங்கள் சுண்டு விரலுக்கும் ஒரு பங்கு இருக்கிறது, இல்லையா? உங்களுக்கு என்ன நிகழும்? நீங்கள் மனச்சோர்வுகூட அடைய நேரிடலாம்.

இப்பொழுது எண்ணிப் பாருங்கள், இந்த உலகத்தில் எத்தனை மனிதர்கள், எத்தனை விதமான உருவக் குறைபாடுகளுடன் இருக்கிறார்கள் என்று.

எல்லா விரல்களும் இல்லாத மனிதர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்! உங்கள் தலை முதல் கால் பெருவிரல் வரை ஒரே ஒரு சிறு ஊனம் இருந்தால்கூட நீங்கள் வாழ்க்கையின் ஏதோ ஒரு அம்சத்தை அனுபவிக்காமல் தவறவிட்டு விடுவீர்கள், சரிதானே?

தினமும சில நிமிடங்கள் நீங்கள் உங்களுடனேயே ஒரு அறையில் அமர்ந்து உங்கள் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் அன்புடன் தொட்டு, வாழ்க்கையில் பல விடயங்களை அனுபவிக்க சாத்தியப்படுத்தியதற்காக அந்தப் பகுதிக்கு நன்றி கூறுங்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு விவசாயிகள்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

இலங்கை விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் இருந்து தூர விலகிச் செல்வதனால் இந்தியா. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளிடம்இதனை ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தலபிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். நாட்டின் விவசாய நடவடிக்கைகள் போதியளவு விவசாயிகள் இன்மையால் பெரும் பின்னடவை எதிர்நோக்கியுள்ளன.

நாட்டின் அதிகளவான சுற்றுலாப் பயணிகள்வந்திருப்பதாக ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால் இந்தியா. பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தமை சுற்றுலாப்பயணிகளின்எண்ணிக்கையில் கணக்கிடப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு புதிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டபோது வயல் நிலங்கள் நிரவப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்படப் போவதாக மக்களை தவறாக வழிநடத்தும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும்எனது அமைச்சினூடாக பிரதான நோக்கம் விவசாயத்திற்குப் பயன் படுத்தக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலமும் பயன்படுத்தப்பட வேண்டும். இதனை நான் உறுதி செய்கின்றேன் என்று அமைச்சர் தெரிவித்தார். இந்நிகழ்வில் மேல்



மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய மகரகம பிரதேச செயலர் தரங்க கருணாரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (3)

# வெளிநாட்டு சுற்றுலாத்துறை குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

## ஊர்காவற்றுறையையும் பார்வையிட்டனர்

கொரியா. ஜப்பான். இந்தோனேசியா. பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் இருந்து வருகை தந்த குழுவினர் அண்மையில் யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெற்ற சுற்றுலாத்துறை தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளனர்.சுமார் 200 பேர்வரை கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் குடாநாட்டில் சுற்றுலாத் துறை சம்பந்தமாக கலந்துரையாடப் பட்டது.

இதில் கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் யாழ். குடாநாட்டில் சுற்றுலாத் துறை மிகவும் பிரபல்யமடைந்து வருகிறது. மேலும் சுற்றுலா விடுதிகளில் அறை களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலா விடுதிகளில் சுமார் 300 அறைகள் வசதி கொண்டவையாக அமைக்கப்பட்டு வருகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேற்படி குழுவினா ஊர்காவற்றுறைப் பகுதிக்கும் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

ஊர்காவற்றுறையில் 80 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் ஏற்கனவே வாழ்ந்து வந்தனர். தற்போது 10 ஆயிரம் பேரே அங்கு வசிக்கின்றனர். இப்பகுதியில் காணப்படும் அநேகமான வீடுகள் கவனிப்பாரின்றி கைவிடப்பட்டுள்ளன. அங்குள்ள வீடுகள் அருமையாகவே தென்படுகின்றன. பல வீடுகளும் பாடசாலைகளும் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. இது குறித்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தெரிவித்ததாவது. அப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக கடல்நீர் நிலப் பகுதிக்குள் புகுவதால் விவசாய நடவடிக்கைகள் சாத்தியப்படாமலுள்ளன. மேலும் பிரதான வாழ்வாதார தொழிலான கடற்றொழில் இந்திய மீன்பிடி றோலர்களின் வருகையினால் 3 நாடகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் குடிநீர் பிரச்சினை பாரிய தொரு பிரச்சினையாகக் காணப்படுகிறது.(3)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் தனுஷ்கோடி பகுதியில் கைது

தனுஷ்கோடிஅரிச்சல்முனைக்கடல் பகுதியைச் சென்றடைந்துள்ள இலங்கை பெண்ணிடம் தமிழ்நாடு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

நேற்று முன்தினம் நள்ளிரவில் தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கடல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நின்ற பெண் குறித்து தனுஷ்கோடி மீனவர்கள மெரைன் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணை நடத்தியுள் ளனர். அதில்தான்யாழ்ப்பாணம்பகுதியைச்சேர்ந்த மேரிமார்கரேட்(வயது58) எனவும் நேற்று முன்தினம் அதி காலை தலைமன்னார் கடல்பகுதியிலிருந்து 40 ஆயிரம்ரூபா கொடுத்து தனுஷ்கோடிக்கு இரவு 9 மணியளவில் வந்ததாகவும் வரும் வழியில் தான் அணிந்து இருந்த 7 பவுண் தங்கச் சங்கிலியை படகு ஓட்டிகள் பறித்துக் கொண்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் வசித்து வரும்தனது மகளின் வீட்டில் வசிப்பதற்காக இந்தியாவுக்கு சட்ட விரோதமாக சென்றமை தெரியவந்ததையடுத்து மெரைன் பொலிஸார் வழக்கு பதிவு செய்து இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறைக்கு கொண்டு சென்றுள்ளனர். (3-9)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 536

Search for people, places and things | Nagendram | Home

சுலக்ஷன்





அருமைச்சந்திரன்




லதீப் சிங்கம்





கீர்த்து கரன்



ராமதாஸ்




செல்வராஜா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2016

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2016 ஆம் திகதி முதல் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவக்கட்டணம்- ரூபா 500.00

கேள்விப்படிவம் விநியோகித்தல் 05.11.2015-19.11.2015 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்- 20.11.2015 காலை 9.30மணிவரை

கேள்விதிறத்தல் - 20.11.2015 மு.ப. 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 20.11.2015 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்டஎவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு :

1.கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2016 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் குத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.

2.சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்த வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

3.சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00 உம் அறவிடலாம். மேலதிகமாக எந்தவரியும் அறவிடக்கூடாது.

4.சபையின் கடைகளில் இறைச்சி/ கருவாடு/ கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாதவாடகை செலுத்த வேண்டும்.

5.சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

I.சிற்றுண்டிச்சாலை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கபபடும்.

II.சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.

III.மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்புவைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.

6.கேள்விப்படிவக்கட்டணம்,கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 11% VAT,2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

7.கேள்விப்பத்திரம் பெறவருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தங்கள் பகுதி கிராம சேவையாளர் மூலம் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

8.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகரசபைக்கே உரியது.

9.கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

## இறைச்சிக்கடை குத்தகை- 2016

| தொ இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை(11% பெறுமதிசேர் வரியும் 2% தே. க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 183.000.00 |
| 2 | பண்ணைகருவாட்டுக்கடை | இல.02 | 5.000.00 | 58.000.00 |
| 3 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5.000.00 | 232.000.00 |
| 4 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5.000.00 | 236.000.00 |
| 5 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5.000.00 | 155.000.00 |
| 6 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5.000.00 | 75.000.00 |
| 7 | பண்ணைகோழிக்கடை | இல.07 | 5.000.00 | 690.000.00 |
| 8 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5.000.00 | 82.000.00 |
| 9 | பண்ணைமாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5.000.00 | 620.000.00 |
| 10 | பண்ணைமாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5.000.00 | 640.000.00 |
| 11 | செங்குந்தாஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 151.000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 600.000.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5.000.00 | 542.000.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 102.700.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 350.000.00 |
| 16 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 690.000.00 |
| 17 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5.000.00 | 305.000.00 |
| 18 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5.000.00 | 265.000.00 |
| 19 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5.000.00 | 400.000.00 |
| 20 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5.000.00 | 268.000.00 |
| 21 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5.000.00 | 236.000.00 |
| 22 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5.000.00 | 250.000.00 |
| 23 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5.000.00 | 200.000.00 |
| 24 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5.000.00 | 247.000.00 |
| 25 | நாவாந்துறைகோழிக்கடை | இல.10 | 5.000.00 | 343.000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5.000.00 | 66.400.00 |
| 27 | நாவாந்துறைகருவாட்டுக்கடை | இல.12 | 5.000.00 | 13.500.00 |
| 28 | அரியாலைமாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 400.000.00 |
| 29 | அரியாலைஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 71.000.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7.000.00 | 505.000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7.000.00 | 520.000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7.000.00 | 385.000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7.000.00 | 400.000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7.000.00 | 430.000.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7.000.00 | 466.000.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7.000.00 | 333.000.00 |
| 37 | முஸ்லிம் கல்லூரிவீதிஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 180.000.00 |

## பொதுச் சந்தை குத்தகை- 2016

| தொ இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை(11% பெறுமதிசேர் வரியும் 2% தே. க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 2,325,000.00 |
| 2 | பண்ணைமீன் சந்தை | 10,000.00 | 3,290,000.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,875,000.00 |
| 4 | செங்குந்தாசந்தை | 10,000.00 | 1,700,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 607,000.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 61,000.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 400,000.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 73,000.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 154,000.00 |
| 10 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 9,500.00 |
| 11 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகன தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 52,500.00 |
| 12 | யாழ். கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 250,000.00 |
| 13 | யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சந்தை கட்டிடத் தொகுதி - மேல் தளம் 8 கடைகள் (விடுதி, இறைச்சி, மீன்வகை தவிர்ந்த ஏனையவை) | 10,000.00 | 192,000.00 |
| 14 | முனிஸ்வரன் வீதி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் (வீரசிங்கம் மண்டபம் அருகாமை) | 2,000.00 | 200,000.00 |
| 15 | மின்சார நிலைய வீதி மலசலகூடம் | 2,000.00 | 115,000.00 |

மேலதிக விபரங்களைமாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர சபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
03.11.2015

பொ.வாகீசன்
ஆணையாளர்
யாழ். மாநகர சபை.

(C-2609)






யாழ். வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உள்ளிட்ட விருந் தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவி ஒருவருக்கு கேடயம் வழங்கப்படுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் நினைவு தினத்தையொட்டி வடமராட்சி நெல்லியடி பகுதியில் அவரது உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உருவச் சிலைக்கான திறப்பு விழா விரைவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-கரணவாய் செய்தியாளர்)





யாழ்.சில்லாலை றோ.க.த.க.பாடசாலையில் கல்வி கற்று வருகின்ற போரினால் பாதிக்கப்பட்ட 5மாணவிகளுக்கு CARM நிறுவனத்தினால் அண்மையில் துவிச்சக்கரவண்டி,புத்தகப்பை,காலணி மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டன.





யாழ்ப்பாணத்தில் தற்போது மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் நிலைமைகளை பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் எச்.எஸ்.ஹஸ்புல்லாஹ் தலைமையிலான குழுவினர் கடந்த முதலாம் திகதி நேரில் பார்வையிட்டனர். யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் மற்றும் தமிழ் முஸ்லிம் உறவுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் வருகை தந்த இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் மீள்குடியேறி வாழும் பகுதிகளான ஜே/86,87 கிராமசேவகர் பிரிவுகளுக்கு சென்று மக்களின் குறை நிறைகளை கேட்டறிந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர். அத்துடன் இந்த விஜயத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பொறுப்பாளர் சந்திரசேன மாலியத்த வருகை தந்து நிலைமைகளை பார்வையிட்டுச் சென்றுள்ளார். பின்னர் யாழ்.முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பில் பள்ளிவாசல் பிரதம பேஷ் இமாம் மஹ்முத் பாலாஹி, தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர் அகிபன், யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தலைவர் ஜமால் முகைதீன், செயலாளர் ஆர்.கே.சுவர்க்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-பொ.சோபிகர்)

யாழ்.எயிட்டால் முன்னாள் போராளிகளுக்கு உதவும் செயற்றிட்டத்தின் கீழ் இடுப்புக்கு கீழ் செயலிழந்த நிலையில் வாழ்வியலைக் கொண்டு நடத்துவதற்கு சிரமப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு ஒரு தொகைப் பணமும் நல்லின பசுமாடும் கன்றும் அண்மையில் வழங்கப்பட்டன. அத்துடன் அங்கவீனமான முன்னாள் போராளிகள் பலருக்கு உதவித் தொகைகளும் வழங்கி வைக்கப்பட்டன.





கொக்குவில் மேற்கு சன சமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு, முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த மெய்வல்லுநர் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றபோது...

நிகழ்வின் நிழல்கள்




# பெரிய்ய்ய... பெரிய்ய்ய... வானம்!



அய்யய்யோ இந்த ஆதியும் ஆனந்தியும் படுத்தும் பாடு இருக்கிறதே!

கம்ப்யூட்டரின் முன்னால் நான் உட்கார்ந்துகொண்டால் போதும் எங்கிருந்தாலும் ஓடிவந்துவிடுவார்கள். "சித்தப்பா, சித்தப்பா ஏதாவது நல்ல ந்ல்ல ஃபோட்டோவா காட்டு" என்று அரித்தெடுப்பார்கள்.

இதில் பெரியவனும் சின்னவளும் வேறு வேறு மாதிரி.

பெரியவன் ஆதிக்குப் பெரிய பெரிய விடயங்களாகக் காட்ட வேண்டும். சின்னவள் ஆனந்தியோ சின்ன விடயங்களையே காட்டச் சொல்லி அடம்பிடிப்பாள்.

ஒரு நாள் கம்ப்யூட்டர் முன் உடகார்ந்திருந்த என்னிடம் ஆதி வந்தான். "பெரிய பெரிய விலங்கா காட்டு சித்தப்பா" என்றான் ஆதி.

முதலில் ஒட்டகத்தைக் காட்டினேன்.

"இன்னும் பெருசா காட்டு சித்தப்பா" என்றான்.

ஒட்டகச்சிவிங்கியைக் காட்டினேன்,

"இன்னும் பெரிசா" என்றான்.

யானையைக் காட்டினேன்.

"அட, இன்னும் பெரிசா" என்றான்.

டைனோசரைக் காட்டினேன்.

"இதுக்கும் மேல பெரிசா" என்றான்.

நீலத் திமிங்கிலத்தைக் காட்டினேன்.

"இதைவிட பெரிசா" என்றான்.

"இதுக்கும் மேலே பெருசா, எந்த விலங்கும் இல்லடா ஆதி" என்றேன்.

"போ சித்தப்பா, பொய சொல்லாதே. கம்ப்யூட்டர் அளவுதான் இருக்குது. அதைப் போய் பெரிய விலங்குன்னு சொல்றே. இன்னும் ஏதாவது பெரிசா இருக்கும் பாரு" என்றான்.

"எவ்வளவு பெரிய விலங்கா இருந்தாலும், கம்ப்யூட்டர்ல சின்னதாத் தான் தெரியும் ஆதி. உன்னோட படத்தைக் கம்ப்யூட்டர்ல பார்த்தாலும், நீ சின்னதா தான் தெரிவே.

ஆனா, நீ கம்ப்யூட்டரவிடப் பெருசாத்தானே இருக்கே" என்று கேட்டு, அவனை மடக்கிவிட்டதாக நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டேன்.

இந்தப் பதில் அல்ல, எந்தப் பதிலாலும் அவனைத் திருப்திப்படுத்த முடியாது என்றே தோன்றியது. நான் பொய் சொல்கிறேன் என்றுதான் நினைத்தான் அவன்.

பெரிய பெரிய மனிதன். பெரிய பெரிய பொகலைன். பெரிய பெரிய சாலை. பெரிய பெரிய கடல். பெரிய பெரிய நாடு. பெரிய பெரிய பெரிய பெரிய...

இப்படி எவ்வளவு 'பெரிய' தெரியுமா?

சலித்துப்போய் ஒரு தடவை என்னிடம், "பெருசெல்லாம் இவ்வளவு சின்னதாத்தான் இருக்குமா?" என்று கேட்டான்.

ஒருமுறை உயரமான ஈஃபில் கோபுரத்தை கம்ப்யூட்டரில் காட்டினேன். 'இன்னும் பெரிசா' என்றான். 102 மாடிகளைக் கொண்ட எம்பயர் ஸ்டேட் கட்டடத்தைக் காட்டினாலும் 'இன்னும் பெரிசா'என்றான். 163 மாடிகளைக் கொண்ட துபாய் புர்ஜ் காலிஃபா கோபுரத்தைக் காட்டினாலும், அப்படியே கேட்டான். மனிதர்கள் கட்டியதில் இதைவிட உயரமானது வேறு ஏதும் இல்லை என்று சொன்னால், அவன் கேட்க மாட்டானே என்பதால் எவெரெஸ்ட் சிகரத்தைக் காட்டினேன்.

அப்போதும், 'இன்னும் பெருசா' என்றே கேட்டான். கோபத்துடன் அவனை வெளியில் இழுத்துக்கொண்டு வந்தேன். இருட்டாக இருந்தது. வானத்தில் விண்மீன்களெல்லாம் கணக்கே இல்லாமல் கொட்டிக் கிடந்தன. 'இன்னும் பெருசான்னா, இது தான் எல்லாத்தையும் விடப் பெருசு"

என்று ஆதியிடம் வானத்தைக் காட்டினேன்.

அப்போதும் திருப்தி அடையவில்லை அவன்.

"வானத்தைவிட பெருசு எது சித்தப்பா?" என்று வெகு சாதாரணமாகக் கேட்டான். எனக்குக் கோபம் போன இடமே தெரியவில்லை. குப்பென்று சிரிப்பு வந்தது.

அவனைத் தூக்கி முத்தமிட்டுவிட்டுச் சொன்னேன்: "எல்லாத்தையும்விடப் பெருசு உன்னோட கண்ணுதான். எவ்வளவு பெரிய விடயமா இருந்தாலும், அதை உன்னோட கண்ணு சின்னதா மாத்திடுது இல்லையா. எவ்வளவு பெரிய கட்டடமா, மலையா, வானமா இருந்தாலும், உன்னோட கண்ணுக்குள்ள ஒரு புள்ளியாதானே மாறுது. எவ்வளவு பெரிய விடயத்தைக் காட்டினாலும் உன்னோட கண்ணுக்கு அது பத்த மாட்டங்குதுல்ல. அதனால, இந்த உலகத்திலேயே பெருசு உன்னோட கண்ணுதான்."

அப்போதுதான் ஆதி முகத்தில் பெரிய வியப்பு ஏற்பட்டது.

"அப்போ, என் கண்ணுதான் எல்லாத்தையும்விடப் பெரிசா சித்தப்பா?" என்று கேட்டான்.

"ஆமாண்டா என் கண்ணு. உன் கண்ணுக்கு முன்னாடி எல்லாம் சின்னதுதான்" என்றேன்.

## 11.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1333 - ஆர்னோ ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் பரவியதில் இத்தாலியின் புளோரென்ஸ் நகரில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1576 - ஸ்பானியப் படைகள் பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரை கைப்பற்றினர். மூன்று நாட்களில் இந்நகரம் பெரிதும் சேதப்படுத்தப்பட்டது.
- 1861 - வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1869 - அறிவியல் இதழ் நேச்சர் முதற்தடவையாக வெளியிடப்பட்டது.
- 1914 - பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.
- 1918 - முதலாம் உலகப் போர்: இத்தாலியிடம் ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு சரணடைந்தது.
- 1918 - 40,000 கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜேர்மானியப் புரட்சி தொடங்கியது.
- 1921 - ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஷி டோக்கியோவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1956 - அக்டோபர் 23 இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டு லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.
- 1966 - இத்தாலியின் புளோரென்ஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப் பெருக்கில் அழிந்தது. 113 பேர் கொல்லப்பட்டனர். பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.
- 1967 - எம்.ஜி.ஆர். கொலை முயற்சி வழக்கு: நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் கொலை முயற்சி வழககில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1979 - ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.
- 1984 - நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.
- 1995 - இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீன் தீவிரவாத வலதுசாரி இஸ்ரேலியரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2004 - ஐவரி கோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1618 - அவுரங்கசீப், முகலாயப் பேரரசர் (இ. 1707)
- 1845 - வாசுதேவ் பல்வந்த் பட்கே, இந்தியப் புரட்சியாளர் (இ. 1883)
- 1897 - ஜானகி அம்மாள், இந்திய தாவரவியலாளர் (இ. 1984)
- 1951 - திரையன் பாசேசுக்கு, உரோமானிய அரசியல்வாதி
- 1957 - டோனி அபோட், ஆத்திரேலிய அரசியல்வாதி, பிரதமர்

### இறப்புகள்

- 1988 - கி. வா. ஜகந்நாதன், தமிழ் இதழாளர், எழுத்தாளர் (பி. 1906)
- 1988 - ஜேம்ஸ் இரத்தினம், ஈழத்து எழுத்தாளர். (பி. 1905)
- 1995 - இட்சாக் ரபீன், இஸ்ரேல் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1922)

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ள் தெரிந்தவன்தான். – டாக்டர் ஜோன்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழின விடுதலைப் போராட்டத்திலும் தாய்ச் சமயம் புறந்தள்ளப்பட்டது!

உலகில் சிலுவைப் போர் இன்னமும் முற்றுப் பெறவில்லையென்று கூறுகின்ற ஆய்வாளர்கள் பலர் உள்ளனர்.

உலகம் முழுவதிலும் நடக்கின்ற யுத்தத்தின் அடி அத்திபாரம் மதம் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

உலகில் எழுச்சிபெற்ற விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் அனைத்தும் மதத்தின்னூடாகவே கட்டியெழுப்பப்பட்டன.

எனினும் இதற்கு முற்றிலும் மாறானது தமிழர்களின் விடுதலைப் போராட்டம். இலங்கையின் ஆட்சி சிங்களவர்களிடம் இருக்கிறதென்று யாரேனும் கூறுவார்களாக இருந்தால், தயவு செய்து நீங்கள் கூறுவதில் திருத்தம் செய்யுங்கள்; இலங்கை பௌத்த சிங்களவர்களின் ஆட்சியில் இருக்கிறதென்று.

ஆம் இலங்கையில் காலத்திற்கு காலம் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தமிழர்கள் தமிழ் மொழியை பேசுவதால் என்று யாரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக தமிழர்கள் பௌத்த மதம் சார்ந்தவர்களாக இல்லாததன் காரணமாகவே அவர்கள் தாக்கப்பட்டனர் – தாக்கப்படுகின்றனர் – தாக்கப்படுவர்.

தமிழர்களில் சிங்களமொழி பேசக்கூடியவர்கள் இலட்சக் கணக்கில் இருந்தனர். பொதுவில் தென் பகுதியில் வாழ்ந்த – வாழ்கின்ற தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு சிங்களம் பேசத்தெரியும். அப்படியானால் அவர்களை சிங்களவர்கள் ஏற்று – அங்கீகரித்து தங்கள் மொழியை கற்றவர்கள் என்று போற்றியிருக்க வேண்டும்.

ஆனால் நடந்தது என்ன என்பதை நாம் சொல்ல வேண்டிய தேவையில்லை.

மாறாக தமிழர்கள் சிங்கள மொழி தெரியாதவர்களாக இருந்தாலும் பௌத்த மதத்தவர்களாக இருந்திருந்தால் பேரினவாதிகள் தமிழர்கள் மீது கை வைத்திருக்க மாட்டார்கள்.

தமிழர்களிலும் புத்த பிக்குகள் பிரித் ஓதிக் கொள்வர். ஆனால் தமிழர்கள் பௌத்தமதம் சாராதவர்களாக இருந்ததினால் தமிழர்களை இந்த நாட்டிலிருந்து ஓரம்கட்டவேண்டும் என்று பௌத்த பீடங்களும், பௌத்தசிங்கள ஆட்சியாளர்களும் தங்களுக்குள் முடிவு செய்துகொண்டனர்.

இது ஒருபுறம் இருக்க, விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் அமைப்புக்கள் தமது தாய்ச் சமயத்தை முன்னிறுத்தாமல் தமிழ்மொழி என்பதை மட்டும் முன்னிறுத்தினர்.

ஆக, தமிழினம் தனது தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தை முன்னிறுத்தாமல் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தது.

ஈழத்தில் தோன்றிய எந்த தமிழின விடுதலைப் போராட்ட அமைப்புக்களாவது தமது பாசறைகளில் கடவுள் உருவத்தை வைத்து வழிபட்டதாக வரலாறு இல்லை.

விடுதலைப்புலிகளின் எந்தவொரு முகாமிலும் பிள்ளையார், சிவன், முருகன் என்ற உருவப்படங்கள் இருக்கவே இல்லை.

இதேவேளை புத்தர் சிலை இல்லாத இராணுவ முகாம்களே இல்லை. தமிழ் இயக்கங்கள் தாய்ச் சமயத்தை ஓரம்கட்டிவிட்டு போராட்டத்தை முன்னெடுத்தமையும் விடுதலைப் போராட்டத்தின் தோல்விக்கான காரணங்களில் ஒன்று என்பதை எவரும் எளிதில் நிராகரித்து விடமுடியாது.

இதை நாம் கூறும் போது சிங்களவர்களில் கத்தோலிக்கர்கள் இருக்கிறார்கள் தானே என்று நீங்கள் கேட்கலாம்.

இராணுவ முகாம்களில் எங்காவது இயேசுவின் சிலையைக் கண்டிருந்தால் நீங்கள் கேட்கும் கேள்வியில் நியாயம் இருக்க முடியும். அது இல்லாத போது, உலகுக்காக தங்கள் சமயத்தை முன்னிறுத்தாத தமிழினத்திடம் எதிலும் உறுதித்தன்மை குறைவாகவே இருக்கும். இதன்விளைவு இலங்கையில் மிகவிரைவில் இந்து சமயம் தன்னிலை இழப்பதாக அமையும்.

# வடக்கு நீதிமன்றங்களின் பணிகளிற்கு இங்குள்ளவர்களை முதலில் நியமியுங்கள்

## நீதியமைச்சரிடம் வடக்கு சட்டத்தரணிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள நீதிமன்றங்களின் பணியாளர்களுக்காக நியமனம் செய்யபபடுவோர் வெளிமாவட்டங்களினை சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இதனால் 30 வருட கால யுத்தத்திற்குள் பங்கர்களிற்குளிருந்து படித்தவர்கள் ஏமாற்றமடைவதாக சாவகச்சேரி நீதவான் திருமதி சிறிநிதி நந்தசேகரம் நீதியமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றையதினம் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள நீதிமன்ற பணிகளிற்கு வெளியிடங்களினை சேர்ந்தவர்களே பெரும்பாலும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இவ் வெற்றிடங்களிற்கு தமிழ் உத்தியோகத்தர்களினை நியமிப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

இதனால் கடந்த கால போர் சூழலுக்கு மத்தியிலும் தமது கற்றலை தொடர்ந்த தமிழர்கள் பெரிதும் ஏமாற்றமடைகின்றனர்.

மேலும் இங்குள்ள நீதிமன்றங்களில் பொலிஸார் சிங்கள மொழியில் வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் வழக்காளிகளும் சட்டத்தரணிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வடக்கு-கிழக்கு நிர்வாக மொழியாக தமிழ் மொழி காணப்படுகின்ற போதிலும் சிங்கள மொழியே பொலிஸாரின் நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு உபயோகப்படுத்தப்படுகின்றது என தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களங்களிற்கு நியமனம் செய்யப்படுகின்ற தமிழ் உத்தியோகஸ்தர்கள் ஒரு சில வருடங்களிற்கு பின்னர் இடமாற்றம் செய்யப்படுவதனால் தமிழ் சட்டத்தரணிகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினை நாடுவதற்கு பின்நிற்பதாக சட்டத்தரணி ரெமிடியஸ் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், முதற்கட்டமாக 600 தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துள்ளோம். மொழிப் பிரச்சினை என்பது இங்குமட்டு மல்ல தேசிய பிரச்சினையாகவே உள் ளது. ஆகவே இவை தொடர்பில் அமைச்சரவையில் கதைத்து உரிய முடிவெடுக்கப்படும் என அமைச்சர்பதலளித்தார். (செ-4,9)

# சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மந்த கதியில் குற்றவிசாரணைகள்!

## மேற்கொள்ளபடுவதாக ஜே.வி.பி.சாடல்

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அசமந்த போக்கினால் குற்ற விசாரணைகள் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜே.வி.பி குற்றம்சுமத்தியுள்ளது.

ஊழல் மோசடிகள் உள்ளிட்ட குற்றச் செயல்கள் உள்ளிட்ட 25 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணை அறிக்கைகள சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் வசந்த சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். இது மிகவும் ஓர் பாரதூரமான நிலைமை என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அனைத்து விசாரணகளையும் பூர்த்தி செய்து, அடுத்த கட்ட நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியுள்ள நிலையில், சட்டமா அதிபர் திணைககளம் உரிய ஒத்துழைப்பு வழங்க மறுத்துள்ளது.

குற்றப் புலனாய்வு பிரிவு, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் பாரிய நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியன உரிய முறையில் முறைப்பாடுகளை விசாரணை செய்துள்ளன.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மந்த கதியினால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட கடந்த அரசாங்கத்தை அனைவரும் இணைந்து தோற்கடித்தனர். ஆயினும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் புதிய அரசாங்கத்தில் இணைந்து கொண்டு ஊழல் மோசடி விசாரணைகளை தடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் விசாரணைகளின் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதி பதியும் பிரதமரும் விளக்கம் அளிக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (செ-12)

# பங்குச்சந்தை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பங்குச் சந்தையின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய இலவச கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இல.147 -2/3 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள (சத்திரச் சந்தி) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கு மாலை 4 மணிக்கு இடம்பெறும் என பங்குப் பரிவர்தனையின் யாழ்.முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார். (செ)

# முதியோர் சங்க நிர்வாகத்தெரிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹிஜ்ராபுரம் முதியோர் சங்கத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட முதியோர் சம்மேளனத் தலைவர் ந.சண்முகரத்தினத்தின் தலைமையில் இடம்பெற்ற ஹிஜ்ராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் வைத்தே புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி ஹிஜ்ராபுரம் முதியோர் சங்கத்தின் முன்னாள் தலைவர் முஹைறதின் அப்துல் லதீப் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் சங்கத்தின் உப தலைவராக ஏ.சி.அப்துல் கபீர், செயலாளராக வீரபாகு அழ கரத்னம், உப செயலாளராக எம்.எம்.அப்துல் ரஹீம், பொருளாளராக எச்.எம்.முஹம்மது இப்றாஹிம் ஆகியோருடன் ஐந்துபேர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்."

*–கிரேக்கப் பழமொழி*

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நடிப்புக்காகக்கூட பொய் பேசாதே



✦ தாமிரப்பாத்திரத்தை நாள்தோறும் துலக்க வேண்டும். இல்லையேல் அதில் களிம்பு ஏறிவிடும். மனமும் தாமிரம் போன்றது.

✦ நாள்தோறும் பிரார்த்தனை, நல்ல எண்ணங்களால் அதை துலக்க வேண்டியது அவசியம்.

✦ தாய்மீதும், தந்தை மீதும் பக்தியில்லாத ஒருவனுக்கு தெய்வபக்தி ஒருநாளும் வராது. தாயும், தந்தையும் துன்மார்க்கர்களாக இருப்பினும் பிள்ளைகள் அவர்களுக்குத் தொண்டு செய்ய கடமைப்பட்டிருக் கிறார்கள்.

✦ எல்லா மனிதர்களிடத்தும் இறைவன் இருக்கிறான். ஆனால், இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாடு.நடிப்பதற்காகக் கூட பொய் பேசுதல், திருடுதல் போன்ற பொருந்தாத செயல்களைச் செய்யக்கூடாது.

✦ நடிப்பதே நாளடைவில் நம் மனதைக் கெடுத்துவிடும். பிறரிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ, அதையே பிறருக்குச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

✦ நிச்சயம் நாம் நல்லதை மட்டுமே எதிர்பார்ப்போம். அதனால் நாமும் பிறருக்கு நல்லவை மட்டுமே செய்ய வேண்டும். ஒருவனுடைய குணநலன்கள் அவனுடைய சகவாசத்தைப் பொறுத்து அமைகிறது. அதேபோல, தன் குணத்திற்கேற்ற நண்பர்களையே ஒருவன் நாடுகிறான். ஆக குணமும், நட்பும் ஒன்றையொன்று சார்ந்தவையாக இருக்கின்றன.

# அஸ்வினின் பந்துவீச்சே டெஸ்ட் தொடரை தீர்மானிக்கும்




டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு அஸ்வின் தான் அச்சுறுத்தலாக இருப்பார் என்று அந்த அணியின் முன்னணி வீரர் டு பிளிசிஸ் தெரிவித்துள்ளார். தென்னாபி ரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதில் இருபது-20 மற்றும் ஒருநாள் தொடர் முடிந்துள்ள நிலையில், எதிர்வரும் 5ஆம் திகதி டெஸட் தொடர் நடைபெற இருக்கிறது.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான டு பிளிசிஸ் கூறுகையில், "முதல் டெஸ்ட் போட்டி நடைபெறவிருக்கும் மொகாலி ஆடுகளம் சுழற்பந்துக்கு சாதகமாக இருக்கும்.

முதல் நாளில் இருந்தே பந்து நன்றாக திரும்பும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதனால் இந்திய அணியின் சுழற்பந்து வீரர் அஸ்வினை நாங்கள் எதிர்த்து விளையாடும் முறை தொடரை தீர்மானிக்கும்.

அஸ்வின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர். ஆனால் அவரை இருபது-20 தொடரில் சிறப்பாக எதிர்கொண்டோம் என்று நினைக்கிறேன.

ஆனால் டெஸ்ட் தொடரில் அவர் சூழ்நிலையோடு ஒன்றி பந்தை மேலும் சுழலச் செய்வார். அதனால் அஸ்வின் தான் எங்களுக்கு முதல் அச்சுறுத்தல்.

இருப்பினும் அவருக்கு எதிராக நாங்கள் சிறந்த திட்டத்தை ஏற்படுத்துவோம். அவரை எந்த வழியில் எதிர்கொள்கிறோமோ, அதுவே இந்த தொடரை உறுதியாக தீர்மானிக்கும்.

இந்த டெஸ்ட் போட்டியில் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் திட்டத்தை ஏற்படுத்தி தாக்குதல் நடத்தி, வெற்றிக்கான வாய்ப்பிற்காக காத்திருப்போம்" என்று தெரிவித்துள்ளார். (க)

# நடாலை வீழ்த்தி பெடரர் சம்பியன்



சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள பாசல் நகரில் உள்ளரங்கத்தில் சர்வதேச டென்னிஸ் போட்டி நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் 2ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), 7ஆம் நிலை வீரரான ரபேல் நடாலை (ஸ்பெயின்) எதிர்கொண்டார்.

இருவரும் இறுதிப்போட்டியில் விளையாடி சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதனால் இந்த போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே ஏற்பட்டது.சொந்த மண் என்பதால் பெடரர் சிறப்பான ஆட்டதை வெளிப்படுத்தினார். அவருக்கு இணையாக நடாலும் தனது திறமையை வெளிப்படுத்தினார்கள்.

முதல் செட்டை பெடரர் 6-3 என எளிதாக வென்றார். ஆனால், 2ஆவது செட்டில் நடால் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செட்டை பெடரர் கடும்போராட்டத்திற்குபின் 5-7 என இழந்தார். இதனால் சம்பியனை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி செட்டில பெடரர் ஆக்ரோஷமாக விளையாடினார்.

இதன்பயனாக பெடரர் அந்த செட்டை 6-3 எனக் கைப்பற்றி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 8ஆவது முறையாக பாசல் ஓபன் கோப்பையை கைப்பற்றினார். மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நேற்றுதான் இறுதிப போட்டியில் நடாலை சந்தித்தார். இதில் நடாலை வீழ்த்தி முத்திரை பதித்தார். (க)

# கரவெட்டி கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிபுகள்

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. குறித்த தொடரில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர வீராங்கனைகளின் விபரங்கள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

6வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் த.சாயப்பிரியன் முதலாம் இடத்தையும் மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் த.பிரணவன் இரண்டாம் இடத்தையும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் சி.அச்சன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர.

8 வயது ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் த. அபிசன் முதலாம் இடத்தையும் அதே கல்லூரியின் ந.அபிபாயன், பி.ஔகதன் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

10வயது ஆண்கள் பிரிவில் காசிநாதர் வித்தியாலயத்தின் பி.பிரவின் முதலாம் இடத்தையும் அதே வித்தியாலயத்தின் சே.அபிமன்யு இரண்டாம் இடத்தையும் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ஜெ.ஆற்றவன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

12 வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பா.மனோஜ் முதலாம் இடத்தையும் உடுப்பிடடி அ.மி. கல்லூரியின் த.சொப்ணன், ஆ.கயாவன் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

14 வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பா.ரெனிசாந்த் முதலாம் இடத்தையும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் ப.சிவபாலஶ்ரீ இரண்டாம் இடத்தையும் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ச.கிசோக் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

16 வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் த.அபிலாஸ், ஏ.சுஞ்சைராம், க.கம்சன் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்புற்றினர. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் சோ.சஞ்சயன் முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.

**பெண்கள் பிரிவு**

6 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ரி.அக்சரா முதலாம் இடத்தைக் கைப்பற்றினார். 8 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பி.நதுசா முதலாம் இடத்தையும் நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையின் உ. கனிகா இரண்டாம் இடத்தையும் உடுப்பிட்டி மகளிர கல்லூரியின் செ.செந்துஜி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

10 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ப.ஆரணி முதலாம் இடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஜெ.லவ்னா, இ.சகானா இருவரும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர.

12 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் ர.மிலோமிகா, பா.செம்பூவினி இருவரும் முறையே முதல் இரு இடங்களையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஏ.சாம்பிகா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

14 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் கம்சவாகினி, ஏ.கம்சப்பிரியா இருவரும் முறையே முதல் இரு இடங்களையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் ஆ.தர்சினி மூன்றாவது இடத்தையும் கைப்பற்றினர். 16 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் சி.சுமித்தா, கி.யதுர்சா. சி.உமையாள் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர். (க)

# டாடா கார் விளம்பர தூதராக லியோனெல் மெஸ்ஸி நியமனம்

ஆர்ஜென்டீனா காற்பந்து அணி கப்டன் லியோனெல் மெஸ்ஸியை, டாடா நிறுவனம் தான் தயாரிக்கும் கார்களுக்கு விளம்பர தூதராக நியமித்துள்ளது.


ஆர்ஜென்டீனாவை சேர்ந்த பிரபல சர்வதேச காற்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி. மேலும் பார்சிலோனா அணிக்காகவும் விளையாடி வருகிறார். பிபா வழங்கும் சர்வதேச காற்பந்து வீரருக்கான விருதை 4 முறை வென்றவர்.

தன்னுடைய சிறப்பான ஆட்டத்தால் ஜொலித்து வரும் மெஸ்ஸிக்கு உலகம் முழுவதும் ரசிகர்களின் எண்ணிக்கை நாள் தோறும் கூடிக் கொண்டே வருகிறது. அதுமட்டுமல்லாது இந்தியாவில் தற்போது சேகுவேரா, பாப் மார்லே போன்று மெஸ்ஸியின் ரீ சேர்ட்டுக்கு மவுசு அதிகம். தமிழகத்திலும் இதன் தாக்கத்தை காண முடியும்.

இந்நிலையில், இந்தியாவின் டாடா நிறுவனம் தான் தயாரிக்கும் கார்களுக்கு சர்வதேச அளவில் விளம்பர தூதராக மெஸ்ஸியை நியமித்துள்ளது. மெஸ்ஸி விளம்பர தூதராக ஒப்புதல் அளித்துள்ள முதல் இந்திய நிறுவனம் டாடா தான் என்பது குறிப்பிடத்தக்கது. (க)




# மனைவி மற்றும் குழந்தையுடன் ஹோட்டலில் பதுங்கியிருக்கும் தாகீர்



தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாகிர், தனது மனைவி மற்றும் குழந்தையுடன் மும்பை ஹோட்டல் அறையில் முடங்கி கிடக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் பிறந்த இம்ரான் தாகிர், பாகிஸ்தானில் முதல் தரப் போட்டிகளில் லாகூர் அணிக்காக விளையாடினார்.

பின்னர் தென்னாபிரிக்காவை சேர்ந்த சுமாய்யா தில்தார் என்பவரை காதலித்து மணந்த தாகிர், முதல் தரப் போட்டிகளில் செய்த சாதனைகளை வைத்து 2010ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான தென்னாபிரிக்க அணியில் இடம் பிடித்தார்.

தற்போது இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றிருக்கும் தாகிர், டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

இந்நிலையில் மும்பை ஹோட்டலில் மனைவி சுமாய்யா தில்தார் மற்றும் ஒன்றரை வயது ஆண் குழந்தையுடன் தங்கியிருக்கும் தாகிர், ஹோட்டலில் இருந்து எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் வர வேண்டாம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

ஏனெனில் பாகிஸ்தானுடன் கிரிக்கெட் போட்டிகள் நடத்த அந்நாட்டு கிரிக்கெட் வாரியத்துடன் நடக்கவிருந்த பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்து, சிவசேனா கட்சியினர் மும்பை பிசிசிஐ அலுவலகத்துக்குள் புகுந்து போராட்டம் நடத்தினர்.

மேலும், அவர்களின் எதிர்ப்பால் பாகிஸ்தான் நடுவர் ஆலீம் தாரை ஐசிசி திரும்பப்பெற்றது. அதேபோல் பாகிஸ்தானின் வசிம் அக்ரம், சோயிப் அக்தர் வர்ணனை பணியில் இருந்து விலகினர்.

இந்த நிலையில் எதிர்பாராத விதமாக எந்தவொரு மோசமான சம்பவமும் நடைபெற்று விடக்கூடாது என்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தென்னாபிரிக்க அணி நிர்வாகம் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (க)

# 818 ஆபாச திரைப்படங்கள்; 40 வயதான நபர் கைது

(பதுளை)

818 ஆபாச திரைப்படங்களுடன் 40 வயதான நபர் ஒருவரை பதுளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதுளை மத்திய பஸ் தரிப்பிடத்திற்கு எதிரில் அமைந்துள்ள வர்த்தக கட்டிடத் தொகுதியில் நடத்தப்பட்டு வந்த கணனி மையத்திலிருந்து இந்த ஆபாச படங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த கணனியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பென்ட்ரைவ், இறுவட்டு மற்றும் செல்லிடப்பேசி மெமரி சிப் ஆகியவற்றிற்கு இந்த கணனி மையத்தைச் சேர்ந்தவர்கள் ஆபாச திரைப்படங்களை பதிவிட்டுக் கொடுத்து வந்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரின் கணனியில் இரகசியமான முறையில் ஆபாச திரைப்படங்கள் சேமிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை அன்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். (செ-12)

# சட்டத்துக்கு முரணாக பொன்சேகா செயற்பாடு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சியிலிருந்து, மூன்று மாகாண சபை உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டமை, சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மேல் மாகாண சபை உறுப்பினர் அசோகா தயாரத்ன, தெற்கு மாகாண சபை உறுப்பினர் பத்மசிறி டி சில்வா மற்றும வடமேல் மாகாண சபை உறுப்பினர் மல்ஹமி ரத்நாயக்க ஆகியோர் வெளியேற்றப்பட்டனர். (செ-12)

# மாணவர்கள் ஆர்ப்பாட்ட பேரணி



கல்வித்துறையை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமா மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டப் பேரணி, ஸ்ரீஜயவர்தனபுரவில் நேற்று நடைபெற்றது.

# தமிழினத்தை சீரழிக்க...

யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று காலை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

உங்கள் கடந்த கால நடவடிக்கைகள் எமக்கு மகிழ்வூட்டுகின்றன. பல்கலைக்கழக அமைப்பு முறைக்கு மோசமான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றைக் கடுமையாக எதிர்த்து வந்துள்ளீர்கள்.

ஆயுதம் கொண்ட அரசியல் கட்சியொன்று அராஜகச் செயல்களில் ஈடுபட்டபோது அதனையும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் எதிர்த்தீர்கள்.

புதிய மாற்றங்கள் வந்த பின்னரும் சேதங்கள், சீர்கேடுகள் களையப்படவேண்டும் என்ற உங்கள் பேரவா எமக்கு மன மகிழ்வை நல்குகின்றன. அதுமட்டுமல்ல,

உங்கள் கௌரவிப்பு நிகழ்வினுடைய நோக்கம் ஓய்வுபெற்றோரை கௌரவிப்பது மட்டுமல்ல, இந்த நிகழ்வினூடாக ஊழியர் சங்கம் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் உள்ள உறவுப் பாலத்தை வலுப்படுத்துவது உங்கள் குறிக்கோள் என்று நீங்கள் வெளிப்படையாகக் கூறியிருப்பது எமது உள்ளங்களைக் குளிர்விக்கின்றது. உங்கள் சமூகச் சிந்தனை போற்றிப் புகழ வேண்டியதொன்று.

யாழ்.பல்கலைக்கழகம் 1974-ம் ஆண்டு தொடக்கம் 2008-ம் ஆண்டு வரையும் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு பல பட்டதாரிகளையும் சிறந்த கல்விமான்களையும் உருவாக்கிவந்தது.

எனினும் 2009-ம் ஆண்டும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் இப் பல்கலைக்கழகத்தினுள் அரசியல் தலையீடு, நிர்வாகச் சீர்கேடுகள், முறையற்ற நியமனங்கள், நிதி நிர்வாகத் துஸ்பிரயோகங்கள் போன்றவை இரத்தப் புற்று நோயாகப் பரவத் தொடங்கியது. இதனால் மிகப் பாரிய பின்னடைவுகளை இந்தப் பல்கலைக்கழகம் சந்தித்தது.

மாணவ சமூகத்தின் ஒழுக்கமற்ற தன்மைகளும் உணரப்பட்டன. இந் நிலைமை கட்டாயமாக மாற்றியமைக்கப்பட வேண்டிய ஒரு சூழலில் நாம் இப்பொழுது இருக்கின்றோம்.

தமிழினம் என்ற சொல்லிற்கு பண்பட்ட சமூகம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் எமது இன்றைய வாழ்க்கை முறை பண்பாடுகெட்ட ஒரு சமூகத்தையே சுட்டி நிற்கின்றது.

எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், பாலியல் வன்புணர்வுகளும் மனித கொலைகளும் எனப் பாரிய குற்றச் செயல்கள் தலைதூக்கி நிற்பதை இன்று காணக் கூடியதாக உள்ளது.

இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்போமாயின் நாம் என்று நாம் வாழ்ந்த காலம் போய் இன்று நான் என வாழத் தலைப்பட்டுள்ளோம் என்பது தெரியவரும். அறிவிலிகளின் ஆணவம்மிக்க எதேச்சதிகாரமே இன்னல்கள் எம்மை வந்தடையக் காரணமாக இருந்தன. அந்நிலை தொடர்கின்றது. போதைப்பொருள் பாவனை போன்ற குற்றச்செயல்கள் தனியொருவரால் மட்டும் மேற்கொள்ள முடியாதவை.

அதிகாரத்தில் உள்ளவர்களின் அந்தரங்கச் சார்பே அவற்றை நடைமுறைப்படுத்த அனுசரணை அளித்துள்ளன.

சுயலாபச்சிந்தனைகள் மேலோங்கியதால் பாதிக்கப்படும் மக்களுக்காக வருந்தாது அவர்களைச் சீர்திருத்த முனையாது தமது சுய நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாது அதிகாரத்தில் இருந்த பலர் வாழத் தலைப்பட்டதாலேயே இச் சமூகச் சீர்கேடுகள் எம்மைப் பாதிக்கத் தொடங்கின. மாணவர்களின் போதைப்பொருள் பாவனை எம்மிடையே காணப்படுகின்ற மிக அச்சுறுத்தலான ஒரு விடயமாகும். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பது எம் எல்லோரதும் தலையாய கடமையாகும்.

இது தொடர்பான விடயங்களை உங்களைப் போன்ற கற்றறிந்தவர்கள் மத்தியில் எடுத்துரைக்கும் போது அதன் விளைவு பாரிய முன்னேற்றத்தைத் தரக்கூடும் என்று நம்புகின்றேன். பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா சமூகங்கள் சமுதாயத்தில் ஒரு நல்ல அந்தஸ்தைப் பெற்றவர்கள். நாட்டின் நடப்புகள் பற்றி உங்கள் கரிசனையும் விழிப்பும் அவசியம் என்று இந்தத் தருணத்தில் கூற வருகின்றேன்.

நான் கூறிய சமூகச் சீரழிவுப் பிரச்சினைகளும் உங்கள் சமூக நலம் பேணும் இன்றைய முன்மாதிரியை ஒட்டி அணுகப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் எமது மாணவ சமுதாயம் காப்பாற்றப்படும்.

எமது தமிழினம் காப்பாற்றப்படும். வேண்டுமென்றே எமது சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டு நிலையை அழிக்கவும் அவர்களின் ஒழுக்கச் சீர்மையை இல்லாதொழிக்கவும் உணர்ச்சிகளை மழுங்கடிக்கவும் நாடகங்கள் திரை மறைவில் நடத்தப்பட்டு வருகின்றன என்பது எனது கருத்து.

2009-ம் ஆண்டிற்கு முன்னர் எந்தவித போதைப்பொருள் பாவனையும் இல்லாதிருந்த எமது மாகாணம் திடீரென்று ஒரு சில விநியோகத்தர்களின் தனிப்பட்ட பொருளாதார உள்ளீட்டின் காரணமாக இன்றைய நிலையை அடைந்துள்ளது என்று கூறுவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. அதுவும் ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் முகாமிட்டிருக்கும் வட மாகாணத்தினுள் எவ்வாறு இத்தகைய ஒரு புற்றுநோய் பரவ முடிந்தது என்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்று.

நீங்கள் இன்று இங்கு காட்டும் ஒற்றுமை, மாணவ சமுதாயத்தின் மேலும் கல்விசார் சமூகத்தின் மேலுங் காட்டும் அன்பு, கரிசனை ஆகியவை எமது தமிழ்ச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் பின்பற்றப்பட வேண்டும்.

ஆகவே அன்பார்ந்த பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களே! விரிவுரையாளர்களே! மற்றும் கல்விசாரா ஊழியர்களே! மாணவர்களே! இந்த நாட்டின் வடபகுதியின் வளர்ச்சியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய தார்மீகப் பொறுப்பு உங்கள் கைகளில் உண்டு என்பதை மறநது விடாதீர்கள் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)

# அரசியல் கைதிகளின் விடயத்தை...

மைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதிகளின் விடுதலை விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது சுமத்திவிட்டு அரசு பாராமுகமாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று மதியம் யாழ் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு சென்றிருந்தார்.

இதன்போது யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ம.இளஞ்செழியன் தலைமையில் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான்கள், சட்டத்தரணிகளினை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் போதே யாழ்.சட்டத்தரணிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா மேற்படி கோரிக்கையினை முன்வைத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விவகாரத்தை சட்ட மா அதிபரிடம் கையளித்து முடிவுகள் எடுக்கப்படக் கூடாது.

மாறாக அரசாங்கம் இக்கைதிகளின் விடயத்தை அரசியல் ரீதியாக அணுகி அவர்களை படிப்படியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலாம் கட்டமாக, ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாக கொண்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிப்பதில் எந்த சிக்கல்களும் இல்லை.

இவர்களிடம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் எவ்வாறான விதத்தில் பெறப்பட்டன என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

இரண்டாம் கட்டமாக, சான்றுப் பொருட்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள், அதாவது துப்பாக்கிகள், சன்னங்கள், கிரனைட் வெடிபொருட்களினை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்கள்.

குறிப்பாக யுத்தகாலத்தில் இவ்வாறான ஆயுதங்கள் வெடிபொருட்கள் வடபகுதில் சர்வ சாதாரணமாகவே பயன்பாட்டில் இருந்துள்ளன.

ஆகையினால் இவற்றை சான்றாதாரமாக கொண்ட இரண்டாம் வகை கைதிகளினையும் விடுவிப்பதில் எந்த சிக்கல்களும் இல்லை.

மூன்றாம் கட்டமாக, முதலிரு குற்றச்சாட்டுக்கள் தவிர்ந்த பாரிய குற்றச்சாட்டுக்களை கொண்ட கைதிகள்.

இவர்களை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் மூலம் பொதுமன்னிப்பில் விடுதலை செய்ய முடியும்.

இல்லது முதலிரு பிரிவினரினை விடுவித்த பின்னர் அடுத்த கட்டமாக இம்மூன்றாம் பிரிவினர் பற்றி முடிவெடுக்க முடியும்.

இதனை நாம் இந்த புதிய அரசிடம் எதிர்பார்க்கும் உரிமை எமக்கு உண்டு. இதுவே நியாயமான தர்க்க ரீதியான அணுகுமுறையாகும்.

மேன்முறையீடு செய்தவர்கள் பாரிய குற்றச்சாட்டுக்கள் கொண்ட கைதிகளினை தகுந்த தருணத்தில் பொதுமன்னிப்பில் விடுவிப்பது குறித்து பரிசீலனைக்கு எடுக்க வேண்டும் என சிறிகாந்தா சுட்டிக் காட்டியிருந்தார்.

மேலும் 1995ஆம் ஆண்டு கைதாகிய கைதிகளும் தற்போது வரை விளக்கமறியலில் உள்ளதாகவும் இந்த 20 வருட விளக்கமறியலை அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையாக கருதி விடுதலை செய்ய வேண்டுமென சட்டத்தரணி திருமதி ஜோய் மகிழ்தேவா கூறினார். (செ-4)

# முதலமைச்சர் விக்னேஸ்வரன்...

முடியும் எனவும் அவர் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் சிற்றம்பலம் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தின் அடிநாதமாக சேர் பொன் இராமநாதனால் ஆரம்பிக்கப்பட்ட பரமேஸ்வரா கல்லூரி விளங்குகின்றது.

இக்கல்லூரி 1974ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகமாக உருவாகி இன்று இந் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

போரின்போது இழப்பதெல்லாம் இழந்த நிலையில் இன்று கல்வி மட்டும்தான் எம்மிடம் எஞ்சியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கற்கின்ற, வேலை செய்கின்ற அனைவரும் தூய சிந்தனையுடையவர்களாய் இருக்கவேண்டும்.

எமது பல்கலைக்கழகத்தின் கண்ணியத்தையும் நேர்மையையும் வளர்க்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே வடக்கு மாகாண முதலமைச்சர் இந் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்.

போரினால் எல்லாவற்றையும் மறந்துள்ள தமிழினத்திற்கு எமது பாரம்பரியத்தை விழிப்பூட்டி அறிவூட்டும் பணியினை முதலமைச்சர் செய்து வருகின்றார்.

2009க்கு பின்னர் அரசியலில் நேர்மை, கண்ணியம், ஒழுக்கம் எல்லாம் தமிழர் தூரப்பில் தொலைந்து விட்ட நிலையில் முதலமைச்சரே அவற்றை மீண்டும் நினைவுபடுத்தி செயல்வடிவில் காட்டிவருகின்றார்.

முதலமைச்சரின் பங்களிப்புடன் சேர் பொன்.இராமநாதன் சிந்தனைகளை முன்னெடுத்து எமது பாரம்பரியத்தை இறுக பற்றிப் பிடிப்பதற்கு இக்கால பகுதி உகந்ததாகும்.

முதலமைச்சரும் யாழ்.பல்கலைக்கழகத்தோடு இணைந்து இன்றைய (நேற்றைய) வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டது போன்ற நிலைப்பாட்டை எடுக்க முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

**Paper classes**
**G.C.E(O/L) Dec 2015**
**English & Maths**
★10 years Past Question Papers &
★5 years Model Question Papers revision
Monday to Thursday at 5.00 p.m & 6.00 p.m
No 886, Hospital road Jaffna.
(2218)
Further details Contact - 0779352999
0779789112

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் வார இதழ் ஒன்றுக்கு பின்வரும் பணி நிலைகளுக்கு ஆட்கள் தேவை
➡ நேரடி பத்திரிகை விநியோகஸ்தர்
➡ அலுவலக உதவியாளர்
➡ பகுதி நேர ஊடகவியலாளர்
➡ சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
தங்களது சுயவிபரக் கோவையை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
முகாமையாளர்
நோர்ச்சி மீடியா (பிறைவேட்) லிமிட்டட்
211, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
021 221 6633
077 538 5494

**வண்.மேற்கு வைத்தியசாலை**
(கங்காதரன்)
(K.K.S Road தட்டாதெரு)
வெளிநோயாளர் பிரிவில் (OPD)
Dr.சிறீதேவா


வழமை போல்
- வெளிநோயாளர் பிரிவு
- கண்சிகிச்சை வசதி
- சகல வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
- வாட் வசதி
- சத்திர சிகிச்சைகள்
- இரத்த, சல,மல பரிசோதனைகள்
- அம்புலன்ஸ் சேவை
(2235)
021 222 1697 - நிர்வாகம்

**Dutch, Deutsch, French**

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.
✶ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
✶ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
✶ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
✶ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(சி-2610)
**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

# 3 வகையான...

கவும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த நீதியமைச்சர் யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளை மூன்று விதமாக வகைப்படுத்தியுள்ளோம். அதில் முதலாவது வழக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதில் பாரதூரமில்லாத வழக்குகளினை சேர்ந்தோர்கள்.

ஓரளவு மோசமான குற்றச்சாட்டுக்களை உடையோரினை பிணையில் விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாட முடியும். மிக மோசமான பாரிய குற்றச்சாட்டுக்கள் கொண்ட கைதிகள் தொடர்பில் ஆராய்ந்தே முடிவெடுக்க முடியும்.

முதலாவதாக உள்ள பிரிவினரை அவர்கள் மீதான வழக்குகளை தள்ளுபடி செய்து விடுவிக்க முடியும்.

மிக முக்கியமாக நீதிமன்றங்களுக்கு கொண்டு வரப்படாமல் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் தடுப்புக் காவலில் இருந்த அனைவரும் இன்று (நேற்று) காலை சிறைச்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசாங்கம் ஆராய்ந்து கொண்டுதான் உள்ளது. மிக விரைவில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4-9)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# பசிலின் மனை...

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பசில் ராஜபக்ஷ பதவி வகித்த காலத்தில், புஷ்பா ராஜபக்ஷ தலைமை தாங்கிய புஷ்பா ராஜபக்ஷ பவுண்டேசன் என்ற நிறுவனம் மீதே இவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் ஒப்புதலின்றி இந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்குக்கு அரச மோர்டகே முதலீட்டு வங்கியில் இருந்து 3.5 மில்லியன் ரூபாய் மாற்றப்பட்டமை தொடர்பாகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனம் ஒன்றில் இருந்து நிதியைக் கைமாற்றும் போது, அதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பது விதிமுறை.

இந்த விதிமுறை மீறல் தொடர்பில் பொலிஸாரின் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்தப் பணப்பரிமாற்றலுக்கு அனுமதி வழங்கிய அதிகாரிகளைக் கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்வியை அடுத்து, புஷ்பா ராஜபக்ஷ அமெரிக்கா சென்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# இந்தியா - இல...

மீறல்களை கட்டுப்படுத்துவதற்கு இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து செயற்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இணைந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதில் எவ்வித முரண்பாடும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு தடவையும் இரு நாடுகளினதும் கடற்படையினரும், கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் கூட்டங்களை நடத்துவதாகவும் இது •கூட்டு ரோந்து பணிகளுக்கு நிகரானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கண்காணிப்பு நடத்துவது குறித்து முன்னதாகவே யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும் அதனை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என குறிப்பிடப்படுகிறது. (செ-12)

# மாணவர்கள்...

தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்களினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் பின்பற்றிய விதம், அரசியல் மேடைகள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஜனநாயக நாடொன்றில் நாட்டிலுள்ள பிரஜையொருவருக்கு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான உரிமை உள்ளது. அவ்வாறு சடடம் மற்றும் சமாதானத்தை சீர்குலைக்கும சந்தர்ப்பங்கள் ஏற்படுமாயின், அதனை அடையாளம் கண்டு அதை தவிர்த்து சட்டம் மற்றும சமாதானத்தை பாதுகாப்பதற்கான பொறுப்பு பொலிஸார் உள்ளிட்ட தரப்பினர் வசம் காணப்படுகின்றது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் எல்லை மீறி செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்வதற்காக தற்போது பொலிஸ் ஆணைக்குழுவினால் உயர மட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு அங்கமாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஆணைக்குழு முன்னிலைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன.

குறிப்பாக இந்த விடயம் பாதுகாப்பு தரப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்காது. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்களுக்கான பட்டப்படிப்பு சான்றிதழ் தொடர்பான பிரச்சினை பல ஆண்டுகளாக காணப்படுகின்றன.

இந்த டிப்ளோமா பட்டப்படிப்பை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை 1990ஆம் ஆண்டு. சுற்று நிருபத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட போதிலும், கடந்த அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது.

எனினும், புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்ததன் பின்னர் இந்த உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் தாமதம் நிலவுகின்றதா அல்லது ஏதேனும் குறைப்பாடுகள் காணப்படுகின்றதா என்பதனை ஆராய வேண்டியுள்ளது.

அவ்வாறு குறைபாடுகள் காணப்படுமாயின், அது குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில், கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட அசம்பாவித சம்பவம் குறித்து ஆராய்வதற்காக பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம், மின்சக்தி மற்றும் மினவலு அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.எம். எஸ். படகொடவின் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வியை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவு அதிகரிக்கப்படும், கல்வி நிறுவனங்கள் அபிவிருத்தி செய்யப்படும், அவை புனரமைக்கப்படும், அரசாங்கம் என்ற ரீதியில அமைதியை பேண நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மாரப்பன தெரிவித்தார். (செ-12)

# இலங்கை - சீனா...

சீனாவுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய தன் தேவையைப் புரிந்து கொண்டுள்ளன.

சீனாவின் உறுதியான பொருளாதாரம், இலங்கை உள்ளிட்ட இந்தப் பிராந்தியத்துக்கே முக்கியமானது.

பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து, சீன முதலீட்டாளர்கள் அதிகளவில் இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டும்.

சீனாவுடனான உறவுகளை விரிவாக்கிக் கொள்வது நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமானது.

முன்னர், சீனாவிடம் இருந்து தூர விலகியிருந்த பிரித்தானியா, இப்போது, அதனுடன் நெருக்கமாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# இராணுவ பிர...

திற்கு அருகில் பொலிஸாரை அல்லது இராணுவத்தினரை நிலைகொள்ளுமாறு தான் உத்தரவு பிறப்பிக்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மாணவர்கள் பாராளுமன்றத்திற்குள் நுழைவார்கள் என்ற அச்சத்தில் வீதிகளை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கவுமில்லை என சபாநாயகர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். (செ-12)

# அரசு பதவி...

வேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்ற முடியாது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு அரசாங்கத்தை நடாத்த முடியவில்லை எனின் கூட்டமைப்புக்கு அரசமைக்க இடமளித்து விலகிச்செல்ல வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அந்த சவாலை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது எனவும் விதுர எம்.பி சுட்டிக்காட்டினார். (செ-12)

**ஜீவக வாத தைலம்**
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-2603)

**சதுரஅடி 30/=**

மிகத் துல்லியமான,உயர் தரத்திலான
6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர் பிரின்டிங்

டிஜிற்றல் பனர்,டிஜிற்றல ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள்,முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
ஜனா டிஜிற்றல் பிரின்டிங்
T.P: 077 0731654
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
இல.246, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.